9

# டால்பின்®


உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு



100/100 உறுதி



10ம் வகுப்பு பொதுத்தேர்வு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

# டால்பின்

## உன்னால் முடியும்

# தமிழ்

புதிய பதிப்பு

# 9

**10ம் வகுப்பு பொதுத் தேர்வு அடிப்படையில் தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்**


நூலாசிரியர்

முனைவர். இரா.ஜான் சாமுவேல்

எம்.ஏ,பி.எட்,எம்.பில், பி.எச்.டி

பட்டதாரி தமிழாசிரியர்

கார்மல் மேல்நிலைப்பள்ளி, நாகர்கோவில்.



98653 06197 | 89256 77710 | 99435 67646

டால்பின் பப்ளிகேசன்ஸ்®

தரமே எங்களின் தாரக மந்திரம்

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com



© All Copyrights reserved


விலை : ரூ.189

# பதிப்புரை

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் – செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
கருமமே கண்ணா யினார்" – குமரகுருபரர்

என்னருமை மாணவச் செல்வங்களே!

சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே அதைத் தொழுது படித்திடடிப் பாப்பா என்றார் பாரதியார். உலக மொழிகளுள் தொன்மையானதும் சிறப்பானதும் தமிழே ஆகும். இத்தகைய செந்தமிழை நீங்கள் சுவைபட படித்துத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற வாழ்த்துகிறேன்!

உங்கள் கைகளில் தவழும் இந்த உரை நூல் சுருக்கமாக எளிய – இனிய நடையில் அமையப் பெற்றுள்ளது. பாடப்பகுதியின் உள்ளிருந்து இடம் பெற்றிருக்கும் வினா – விடைகள் போட்டித் தேர்வுகள் எழுதுவதற்குப் பயன்படும் வகையில் மிக மிக நேர்த்தியாக உருவாக்கப்பெற்றுள்ளது.

பொதுத் தேர்வுகளில் கேட்கப்படும் வினாக்களின் அடிப்படையிலேயே இவ்வுரை நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வுரை நூல் உங்களுக்கு முழு மதிப்பெண்களைப் பெற்றுத்தரும் என்பதில் ஐயமில்லை.

நன்றாகப் படியுங்கள்!
சாதனை படையுங்கள்!
வாழ்வில் வெற்றி பெறுங்கள்!

பாராட்டுகளுடன்
பதிப்பகத்தார்.

## புத்தகங்களைப் பெறுவதற்கு

**மரியாதைக்குரிய தலைமையாசிரியர்கள் / ஆசிரியைகள் மற்றும் ஆசிரியப் பெருந்தகைகளுக்கு !**

வணக்கம். **டால்பின் பப்ளிகேஷன்ஸ்** நிறுவனத்திற்கு தாங்கள் வழங்கி வருகின்ற பேராதரவிற்கு எங்களின் சிரம்தாழ்ந்த நன்றிகள். நீங்களே எங்களின் வளர்ச்சியின் அடித்தளம். தற்பொழுது தாங்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்களைப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றிப் பெற்றுக்கொள்ளலாம்.

**புத்தகங்களைப் பெற**

அலைபேசி எண் (Mobile No) : **9865306197 / 8925677710 / 9943567646**

கட்செவி எண் (Whatsapp No) : **9345314146**

குறுஞ்செய்தி (Sms) : **9345330937**

வலைதளம் (Website) : **www.kalvidolphin.com**

மின்னஞ்சல் (E-mail ID) : **dolphin.pub2005@gmail.com**

## பணம் செலுத்துவதற்கான விவரங்கள்

**கேட்பு வரைவோலை (D.D.) அல்லது காசோலை (Cheque) :**

டால்பின் பப்ளிகேஷன்ஸ் - ஸ்ரீவில்லிபுத்தூர் **(DOLPHIN PUBLICATIONS, SRIVILLIPUTTUR)** என்ற பெயருக்கு எடுத்து அனுப்பவும்.

## வங்கிக் கணக்கு விவரங்கள்

G Pay **63743 17883**

| **KARUR VYSYA BANK** | **CITY UNION BANK** |
|---|---|
| A/C No : 1804135000006000 | A/C No : 328109000204092 |
| IFSC CODE : KVBL0001804 | IFSC CODE : CIUB0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

| **ICICI BANK** | **TAMILNADU MERCANTILE BANK** |
|---|---|
| A/C No : 446005500030 | A/C No : 328150310875103 |
| IFSC CODE : ICIC0004460 | IFSC CODE : TMBL0000328 |
| BRANCH : Srivilliputtur | BRANCH : Srivilliputtur |

**பணம் செலுத்திய பின் கீழ்க்கண்ட தொலைபேசி எண்களில் கண்டிப்பாக தகவல் தெரிவிக்கவும்**

**98653 06197, 89256 77710, 99435 67646**

# பொருளடக்கம்


| இயல் | பாடத்தலைப்புகள் | | பக்க எண். |
| --- | --- | --- | --- |
| | **பாடப்பகுதிகளும், ஆசிரியர்களும்** | | vii |
| | **மனப்பாடப்பகுதிகள்** | | viii |
| | **அறிவை விரிவு செய்** | | x |
| **1** | **அமுதென்று பேர்** | | 1 |
| | கவிதைப்பேழை | தமிழ்விடு தூது ✸ | 12 |
| | உரைநடை | திராவிட மொழிக்குடும்பம் | 14 |
| | கவிதைப்பேழை | தமிழோவியம் | 17 |
| | விரிவானம் | ஆறாம் திணை | 19 |
| | கற்கண்டு | எழுத்து - அளபெடை | 21 |
| **2** | **உயிருக்கு வேர்** | | 23 |
| | உரைநடை | நீரின்றி அமையாது உலகு | 36 |
| | கவிதைப்பேழை | பெரியபுராணம் ✸ | 40 |
| | | புறநானூறு ✸ | 42 |
| | விரிவானம் | தண்ணீர் | 27 |
| | கற்கண்டு | பகுபத உறுப்பிலக்கணம் | 43 |
| **3** | **உள்ளத்தின் சீர்** | | 45 |
| | **வாழ்வியல் இலக்கியம் - திருக்குறள் ✸** | | 57 |
| | உரைநடை | ஏறு தழுவுதல் | 60 |
| | கவிதைப்பேழை | மணிமேகலை | 63 |
| | | மார்கழிப் பெருவிழா | 65 |
| | விரிவானம் | தாய்மைக்கு வறட்சி இல்லை! | 66 |
| | கற்கண்டு | தொடர் இலக்கணம், ஆகுபெயர் | 66 |

| | | | |
|---|---|---|---|
| 4 | கசடற மொழிதல் | | 71 |
| | உரைநடை | கல்வியில் சிறந்த பெண்கள் | 84 |
| | கவிதைப்பேழை | குடும்ப விளக்கு | 87 |
| | | உயிர்வகை ✸ | 90 |
| | விரிவானம் | வீட்டிற்கோர் புத்தகசாலை | 91 |
| | கற்கண்டு | துணைவினைகள் | 92 |
| 5 | கலை பல வளர்த்தல் | | 94 |
| | வாழ்வியல் இலக்கியம் – திருக்குறள் ✸ | | 105 |
| | உரைநடை | சிற்பக்கலை | 107 |
| | கவிதைப்பேழை | இராவண காவியம் ✸ | 111 |
| | விரிவானம் | செய்தி | 113 |
| | கற்கண்டு | வல்லினம் மிகும் இடங்கள் | 114 |
| 6 | வாழிய நிலனே | | 116 |
| | உரைநடை | இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | 130 |
| | கவிதைப்பேழை | சீவக சிந்தாமணி ✸ | 133 |
| | விரிவானம் | விண்ணையும் சாடுவோம் | 135 |
| | கற்கண்டு | வல்லினம் மிகா இடங்கள் | 136 |
| 7 | என்தலைக் கடனே | | 137 |
| | உரைநடை | பெரியாரின் சிந்தனைகள் | 148 |
| | கவிதைப்பேழை | ஓ, என் சமகாலத் தோழர்களே!✸ | 151 |
| | | யசோதர காவியம் ✸ | 153 |
| | விரிவானம் | மகனுக்கு எழுதிய கடிதம் | 140 |
| | கற்கண்டு | யாப்பிலக்கணம் | 154 |

| | | |
|---|---|---|
| | பாடலைப்படித்து வினாக்களுக்கு விடை தருக. | 156 |
| | விண்ணப்பம் எழுதுதல் | 160 |
| | பொதுக்கட்டுரைகள் | 167 |
| | இலக்கிய நயம் பாராட்டல் | 176 |
| | எளிய வழியில் இலக்கணக் குறிப்புகளைக் கண்டறியும் முறைகள் | 182 |
| | இலக்கணக்குறிப்பு, பகுபத உறுப்பிலக்கணம் | 185 |
| | அணிகள் | 188 |
| | மாதிரி வினாத்தாள் - 1 | 193 |
| | மாதிரி வினாத்தாள் - 2 | 195 |




# பாடப்பகுதியும், ஆசிரியர்களும்

## செய்யுள்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| தமிழோவியம் | ஈரோடு தமிழன்பன் |
| பெரியபுராணம் | சேக்கிழார் |
| புறநானூறு | குடபுலவியனார் |
| மணிமேகலை | சீத்தலைச் சாத்தனார் |
| குடும்ப விளக்கு | பாரதிதாசன் |
| உயிர்வகை | தொல்காப்பியர் |
| இராவண காவியம் | புலவர் குழந்தை |
| சீவக சிந்தாமணி | திருத்தக்கதேவர் |
| ஓ, என் சமகாலத் தோழர்களே! | வைரமுத்து |

## உரைநடை

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| இந்திய தேசிய இராணுவத்தில் தமிழர் பங்கு | மா.சு.அண்ணாமலை |

## துணைப்பாடம்

| பாடப்பகுதி | ஆசிரியர் |
|---|---|
| ஆறாம் திணை | அ. முத்துலிங்கம் |
| தண்ணீர் | கந்தர்வன் |
| தாய்மைக்கு வறட்சி இல்லை! | சு.சமுத்திரம் |
| வீட்டிற்கோர் புத்தகசாலை (வானொலி உரை) | அறிஞர் அண்ணா |
| செய்தி | தி.ஜானகிராமன் |
| மகனுக்கு எழுதிய கடிதம் | நா.முத்துக்குமார் |

# மனப்பாடப்பகுதி

## தமிழ்விடு தூது

தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்

உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்துஉரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள் - மண்ணில்

குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்

வந்துஎன்றும் சிந்தா மணியாய் இருந்தஉனைச்
சிந்துஎன்று சொல்லிய நாச்சிந்துமே

## பெரியபுராணம்

காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

**- சேக்கிழார்**

## புறநானூறு

நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!
உண்டி முதற்றே உணவின் பிண்டம்;
உணவெனப் படுவது நிலத்தொடு நீரே;
நீரும் நிலமும் புணரியோர், ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசினோரே!

**- குடபுலவியனார்**

## திருக்குறள்

### பொறையுடைமை

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாம்தம்
தகுதியான் வென்று விடல்.

### கேள்வி

எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்.

### வினைத்தூய்மை

ஓஒதல் வேண்டும் ஒளிமாழ்கும் செய்வினை
ஆஅதும் என்னு மவர்.

**- திருவள்ளுவர்**

## உயிர்வகை

ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே

**- தொல்காப்பியர்**

## இராவண காவியம்

**மருதம்**

கல்லிடைப் பிறந்த ஆறும்
கரைபொரு குளனும் தோயும்
முல்லைஅம் புறவில் தோன்று
முருகுகான் யாறு பாயும்
நெல்லினைக் கரும்பு காக்கும்
நீரினைக் கால்வாய் தேக்கும்
மல்லல்அம் செறுவில் காஞ்சி
வஞ்சியும் மருதம் பூக்கும்

**- புலவர் குழந்தை**

## திருக்குறள்

**குடிமை**

அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்தல் இலர்.

**சான்றாண்மை**

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

**நாணுடைமை**

பிறர்நாணத் தக்கது தான்நாணான் ஆயின்
அறம்நாணத் தக்கது உடைத்து.

**உழவு**

சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

**- திருவள்ளுவர்**

## சீவக சிந்தாமணி

**தலைவணங்கி விளைந்த நெற்பயிர்**

சொல்அரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்
மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்
செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்தநூல்
கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே

**- திருத்தக்கதேவர்**

## ஓ, என் சமகாலத் தோழர்களே!

பாய்ந்து பரவும் இளைய நதிகளே
பள்ளம் நிரப்ப வாருங்கள்
காய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்
கதிர்கள் சுமந்து தாருங்கள்

முன்னோர் சொன்ன முதுமொழி எல்லாம்
முதுகில் சுமந்தால் போதாது
சொன்னோர் கருத்தை வாழ்க்கைப் படுத்த
துணிந்தால் துன்பம் வாராது

**- வைரமுத்து**

## யசோதர காவியம்

ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக
போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக
நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக
காக்குவது ஏதெனில் விரதம் காக்கவே.

# அறிவை விரிவு செய்

| | |
|---|---|
| திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் | **இராபர்ட் கால்டுவெல்** |
| மொழிபெயர்ப்பும் ஒலி பெயர்ப்பும் | **மணவை முஸ்தபா** |
| தமிழ்நடைக் கையேடு மாணவர்களுக்கான தமிழ் | **என். சொக்கன்** |
| அழகின் சிரிப்பு | **பாவேந்தர் பாரதிதாசன்** |
| தண்ணீர் தண்ணீர் | **கோமல் சுவாமிநாதன்** |
| தண்ணீர் தேசம் | **வைரமுத்து** |
| வாய்க்கால் மீன்கள் | **வெ. இறையன்பு** |
| மழைக்காலமும் குயிலோசையும் | **மா.கிருஷ்ணன்** |
| தமிழர் நாகரிகமும் பண்பாடும் | **அ.தட்சிணாமூர்த்தி** |
| தமிழக வரலாறும் தமிழர் பண்பாடும் | **மா.இராசமாணிக்கனார்** |
| தமிழ்ச் செவ்வியல் இலக்கியத்தில் பறவைகள் | **க.ரத்னம்** |
| தொல்லியல் நோக்கில் சங்க காலம் | **கா.ராஜன்** |
| தமிழர் சால்பு | **சு.வித்யானந்தன்** |
| ஓய்ந்திருக்கலாகாது | **கல்விச்சிறுகதைகள் (தொகுப்பு: அரசி-ஆதிவள்ளியப்பன்)** |
| முதல் ஆசிரியர் | **சிங்கிஸ் ஐத்மாத்தவ்** |
| கல்வியில் நாடகம் | **பிரளயன்** |
| மலாலா | **கரும்பலகை யுத்தம்** |
| நட்புக்காலம் | **கவிஞர் அறிவுமதி** |
| திருக்குறள் கதைகள் | **கிருபானந்தவாரியார்** |
| கையா, உலகே ஒரு உயிர் | **ஜேம்ஸ் லவ்லாக் (தமிழில் : சா.சுரேஷ்)** |
| ஆகாயத்துக்கு அடுத்த வீடு | **மு.மேத்தா** |
| தமிழ்ப் பழமொழிகள் | **கி.வா.ஜகந்நாதன்** |
| இருட்டு எனக்குப் பிடிக்கும் (அன்றாட வாழ்வில் அறிவியல்) | **ச.தமிழ்ச்செல்வன்** |
| பெரியாரின் சிந்தனைகள் | **வே.ஆனைமுத்து** |
| அஞ்சல் தலைகளின் கதை | **எஸ்.பி.சட்டர்ஜி (மொழிபெயர்ப்பு-வீ.மு.சாம்பசிவன்)** |
| தங்கைக்கு | **மு.வரதராசன்** |
| தம்பிக்கு | **அறிஞர் அண்ணா** |

இயல் ஒன்று

# அமுதென்று பேர்

## மொழி

## திறன் அறிவோம் (பக்கம்.17)

### பலவுள் தெரிக.

1. திணை, பால், எண் ஆகியவற்றை உணர்த்தும் பால் காட்டும் விகுதிகள் இல்லாத திராவிடமொழி எது?
அ) தமிழ் ஆ) தெலுங்கு இ) மலையாளம் ஈ) கன்னடம்
**[இ) மலையாளம்]**

2. தமிழ்விடு தூது .................. என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை
இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல் **[இ) சிற்றிலக்கியம்]**

3. பின்வருவனவற்றில் அளபெடை இடம்பெறாத தொடர் எது?
அ) குக்கூஉ எனக் குயில் கூவியது ஆ) கொக்கரக்கோஒ எனச் சேவல் கூவியது.
இ) அண்ணாஅ என அழைத்தான் ஈ) ஓடி வா ஓடி வா **[ஈ) ஓடி வா ஓடி வா]**

4. ''காலம் பிறக்கும்முன் பிறந்தது தமிழே! - எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!'' ......... இவ்வடிகளில் பயின்று வரும் நயங்கள் - யாவை?
அ) முரண், எதுகை, அளபெடை ஆ) இயைபு, அளபெடை, அந்தாதி
இ) மோனை, எதுகை, இயைபு ஈ) மோனை, முரண், அந்தாதி **[இ) மோனை, எதுகை, இயைபு]**

5. சிந்தா மணி என்பதன் இலக்கணக்குறிப்பு-
அ) வேற்றுமைத்தொகை ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) பண்புத்தொகை ஈ) வினைத்தொகை
**[ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]**

### குறுவினா

1. நீங்கள் பேசும் மொழி எந்த இந்திய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தது?
   - நாங்கள் பேசும் தமிழ்மொழி தென் திராவிட மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தது.

2. தமிழோவியம் கவிதையில் உங்களை மிகவும் ஈர்த்த அடிகள் குறித்து எழுதுக.
தமிழோவியம் கவிதையில் என்னை மிகவும் ஈர்த்த அடிகள்:
''காலம் பிறக்கும் முன் பிறந்தது தமிழே! எந்தக்
காலமும் நிலையாய் இருப்பதும் தமிழே!''

- உலகம் தோன்றுவதற்கு முன்னர் தோன்றியது தமிழ்மொழி.
- எந்தக் காலமும் நிலைத்து நிற்பது தமிழ்மொழி.

3. **கண்ணி என்பதன் விளக்கம் யாது?**
   - இரண்டு கண்களைப் போல் இரண்டிரண்டு பூக்களை வைத்துத் தொடுக்கப்படும் மாலைக்குக் கண்ணி என்று பெயர்.
   - இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

4. **''அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்'' - இலக்கியங்களின் பாடுபொருள்களாக இவ்வடிகள் உணர்த்துவன யாவை?**
   - இலக்கியங்களின் பாடுபொருள்கள் அகப்பொருள், புறப்பொருள் ஆகும்.
   - மக்களின் அகவாழ்வியல் முறைகள்; புறவாழ்வோடு தொடர்புடைய செய்திகள் பற்றியே இலக்கியங்கள் பாடின.

5. **தென்திராவிட மொழிகள் ஏதேனும் நான்கினை எழுதுக.**
   - தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா, படகா ஆகியவை தென் திராவிட மொழிகளாகும்.

6. **அளபெடை எத்தனை வகைப்படும்? அவை யாவை?**
   - அளபெடை இரண்டு வகைப்படும்.
   - 1. உயிரளபெடை, 2. ஒற்றளபெடை.

## சிறுவினா

1. **தமிழ்விடு தூது உணர்த்தும் தமிழின் சிறப்புகளை எழுதுக.**
   - தமிழ் இயல், இசை, நாடகம் என முத்தமிழாய்ச் சிறந்து விளங்குகிறது.
   - துறை, தாழிசை, விருத்தம் என்னும் மூவகைப் பாவினங்களைக் கொண்டது.
   - பள்ளு, குறவஞ்சி உள்ளிட்ட 96 வகைச் சிற்றிலக்கியங்களைக் கொண்டது.
   - என்றுமே சிந்தாமணியாய் விளங்குகிறது.
   - வீடு பேற்றை அளிக்கும் கனியாக விளங்குகிறது.

2. **திராவிட மொழிகளின் பிரிவுகள் யாவை? அவற்றுள் உங்களுக்குத் தெரிந்த மொழிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.**

   திராவிட மொழிகளைத் தென் திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வட திராவிட மொழிகள் என மூன்றாகப் பிரிப்பர். அவற்றுள் சிறந்த மொழிகள் தமிழ், தெலுங்கு, மலையாளம், துளு, குடகு, கூவி (குவி), கோண்டா போன்றவை.

   - **தமிழ்** : தொன்மையும் இலக்கிய இலக்கண வளமும் உடைய மொழி; பிறமொழிக் கலப்புக் குறைந்த மொழி; திராவிட மொழிகளின் தாய்மொழி.
   - **தெலுங்கு** : தேன் போன்ற இனிய மொழி; எழுத்துமுறை தேவநாகரியை ஒட்டி அமைந்துள்ளது.
   - **மலையாளம்** : சேரநாட்டின் மொழி; தமிழோடு ஒத்த இனமொழி என்பர். இதன் இலக்கியம் இராமசரிதம்.

**3. மூன்று என்னும் எண்ணுப்பெயர் பிற திராவிடமொழிகளில் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?**

- திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே அமைந்துள்ளன.
- மூன்று - தமிழ்
- மூணு - மலையாளம்
- மூடு - தெலுங்கு
- மூரு - கன்னடம்
- மூஜி - துளு

---

**4. ''புதுக்கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்'' - உங்கள் பங்கினைக் குறிப்பிடுக.**

- புதுவடிவில் புதுப்பொலிவுடன் தமிழ் வளர்ப்பேன். அறிவியல், மருத்துவம், பொறியியல் சார்ந்த மொழிபெயர்ப்புகளை உடனுக்குடன் செய்வேன்.
- நற்றமிழை அறிவியல் தமிழாய், கணினித் தமிழாய் இணையத் தமிழாய், வணிகத் தமிழாய்ப் புதுவடிவில் வளர்த்தெடுப்பேன்.
- பிறமொழிக் கலப்பின்றித் தூய தமிழில் பேசுவேன்.

---

## நெடுவினா

**1. காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழின் தனித்தன்மைகள் பற்றி எழுதுக.**

**முன்னுரை:**

தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் தமிழ் மொழியின் தனித் தன்மைகளைக் காண்போம்.

**தொன்மை:**

தமிழ்மொழி தொன்மையும் தனித்தன்மையும் வாய்ந்த இலக்கண இலக்கிய வளங்களைப் பெற்ற மொழி.

**தனித்தன்மை:**

திராவிட மொழிகளுள் பிற மொழித்தாக்கம் மிகவும் குறைந்ததாகக் காணப்படும் மொழி தமிழேயாகும்.

**தாய்மொழி:**

தமிழ்மொழி, திராவிட மொழிகள் சிலவற்றின் தாய்மொழியாகக் கருதப்படுகிறது.

**சொல்வளம்:**

ஒரே பொருளைக் குறிக்கப் பல சொற்கள் அமைந்த சொல்வளமும் சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி தமிழேயாகும்.

**கல்வெட்டுகள்:**

இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழ்க் கல்வெட்டுகளே.

**வேர்ச்சொற்கள்:**

தமிழின் பல வேர்ச்சொற்கள் ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி பிற திராவிட மொழிகளில் வடிவம் மாறியுள்ளன.

சுட்டுப்பெயர்களும் மூவிடப்பெயர்களும் பெரும்பாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன.

**நிலைத்தமொழி:**

தோன்றிய காலம் முதல் இன்றுவரை அழிவில்லாமல் நிலைத்து வளர்ந்து கொண்டிருக்கும் சிறந்த மொழி தமிழ்மொழி.

**மூலத் திராவிட மொழி:**

தமிழ்மொழி மூலத் திராவிட மொழியின் பண்புகள் பலவற்றையும் பேணிப் பாதுகாத்து வருகிறது.

**புதுமையை ஏற்றல்:**

தமிழ்மொழி தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்டதாக விளங்கி வருகிறது.

**முடிவுரை:**

செம்மொழியான தமிழ்மொழி காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு என்றும் இளமை மாறாமல் நிலைத்து நிற்கிறது. தமிழின் பெருமை குன்றாமல் நாளும் காப்போம்.

**சுருக்கமான விடை**

**முன்னுரை:**

எத்தகைய கால மாற்றத்திலும் எல்லாப் புதுமைகளுக்கும் ஈடு கொடுத்து இயங்கும் ஆற்றல் கொண்ட தமிழ் மொழியின் தனித்தன்மைகள் பற்றிக் காண்போம்.

**தமிழின் தனித்தன்மைகள்:**

- தமிழ் மொழி தொன்மையான இலக்கண இலக்கியங்களைக் கொண்ட மொழி.
- பெரும்பாலான உலக நாடுகளில் பேசப்படும் பெருமையுடையது.
- பிறமொழிக் கலப்பின்றி தனித்து இயங்கும் மொழி.
- சொல்வளம் மிகுந்த மொழி.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழ்க் கல்வெட்டுகளே.
- மிகுதியான வேர்ச்சொற்களைக் கொண்ட மொழி.
- தமிழ்ச் சொற்களே ஒலி இடம் பெயர்தல் என்னும் விதிப்படி பிற திராவிட மொழிகளில் சொற்களாக மாறியுள்ளன.
- தோன்றிய நாள் முதல் நிலைத்து நிற்கும் மொழி தமிழ் மொழி.
- மூலத் திராவிட மொழிகளின் பண்புகளைப் பேணிப் பாதுகாக்கும் மொழி.
- புதுமைகளை ஏற்று வளரும் மொழி.

**முடிவுரை:**

என்றும் இளமை மாறாமல் நிலைத்து நிற்கும் தமிழ்மொழியின் பெருமை குன்றாமல் காப்பது ஒவ்வொரு தமிழரின் கடமையாகும்.

2. **புலம் பெயர்ந்த மனிதர்களின் அகத்திலும் புறத்திலும் எங்ஙனம் பாதிப்பு தெரிகின்றது என்பதை ஆறாம் திணை வாயிலாக விவரிக்க.**

**முன்னுரை:**

அ.முத்துலிங்கத்தின் 'ஆறாம் திணை' சிறுகதை புலம் பெயர்ந்த தமிழர்களின் வாழ்க்கை அனுபவங்களை ஆழமாகப் பிரதிபலிக்கிறது.

**புலம்பெயர்வோர் நிலை:**

தாய்நாட்டை விட்டு புதிய தேசத்தில் தன்னுடைய அடையாளத்தையும் உறவுகளையும் மறந்து புதிய தேசத்தில் புதிய உறவுகளை உருவாக்க முயலும்போது ஏற்படும் அகப்புற மாற்றங்களைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது ஆறாம் திணை.

**தனிமை மற்றும் ஏக்கம்:**

புலம் பெயர்ந்த மக்கள் மொழி தெரியாத தேசத்தில் உதவ உறவுகளின்றி தனிமைத் துயரில் வாடிக் கொண்டு ஏக்கத்துடன் உரிமை இல்லாத தேசத்தில் உழைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**அடையாளக் குழப்பம்:**

புலம் பெயர்ந்தவர்கள் தாங்கள் தங்கியிருக்கும் இடத்தை தங்களுடையது என்று உணர முடியாமல் தன்னுடைய தாய் நாட்டையும் பிழைக்கும் நாட்டையும் எண்ணி அடையாளக் குழப்பத்துடனே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**ஏமாற்றம்:**

புதிய தேசம் நிம்மதியைக் கொடுக்கும் என்ற எதிர்பார்ப்பில் புலம் பெயர்ந்தவர்கள் அவர்கள் எதிர் கொள்ளும் நிதி, பண்பாட்டு, சமூகச் சிக்கல்கள் அவர்களது எதிர்பார்ப்புகளை நொறுக்கிவிடுகின்றன. இதனால் அவர்கள் மனதில் ஏமாற்றம் நிலவுகிறது.

**மொழி:**

புலம் பெயர்ந்தவர்கள் அதிகம் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்களில் ஒன்று மொழி. புதிய இடத்தில் அவர்கள் தங்கள் மொழியில் உரையாட முடியாது. இதனால் அவர்கள் தனிமையை உணர்கிறார்கள்.

**ஆசைகள் சிதைக்கப்படுதல்:**

பொருளாதார முன்னேற்றத்திற்காக அவர்கள் தங்கள் ஆசைகளைத் துறந்து ஏராளமான சமரசங்களைச் செய்து வாழ வேண்டிய நிலை ஏற்படுகிறது.

**சமூக ஒதுக்குதல் மற்றும் இனப் பாகுபாடு:**

புலம் பெயர்ந்தவர்கள் எதிர் கொள்ளும் இன்னொரு சிக்கல் சமூக ஒதுக்குதல் மற்றும் இனப்பாகுபாடு. சமூகத்தை இனத்தைக் காரணம் காட்டி இவர்களைப் பூரணமாக ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிப்பது இவர்கள் அகப்புற வாழ்வை மேலும் சிக்கலாக்குகிறது.

**முடிவுரை:**

புலம்பெயர்ந்தவர்கள் தனிமை, ஏக்கம், அடையாளக் குழப்பம் போன்ற அக மாற்றங்களாலும் மொழி, கலாச்சாரம், சமூகம், இனம் போன்ற புற மாற்றங்களாலும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை ஆறாம் திணை மிக ஆழமாக விளக்குகிறது.

**சுருக்கமான விடை**

**முன்னுரை:**

அ.முத்துலிங்கம் எழுதிய ஆறாம் திணை சிறுகதை உணர்த்தும் அகப்புற மாற்றங்கள் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**புலம்பெயர் மக்களின் அக மாற்றங்கள்:**

புலம்பெயர் மக்கள் மொழி தெரியாத தேசத்தில் தனது உறவுகளைப் பிரிந்து தனது நாட்டையும் உறவுகளையும் என்று காண்போமோ என்று மனதிற்குள் ஏங்குகின்றனர்.

தாய் நாட்டையும் பிழைக்கும் நாட்டையும் எண்ணிக் குழப்பத்துடனே வாழ்கின்றனர்.

சமூக, பண்பாட்டுச் சிக்கல்களில் சிக்கித்தவித்து ஏமாற்றங்களால் நொறுங்கிப் போகின்றனர்.

**புலம்பெயர் மக்களின் புற மாற்றங்கள்:**

புலம்பெயர் தேசத்தில் தாய்மொழியையும் பேச முடியாமல் புதிய மொழியையும் அறியாமல் தனது மொழியையும் கலாச்சாரத்தையும் இழந்து தவிக்கின்றனர்.

பொருளாதார சிக்கல்களைச் சமாளிப்பதற்காகத் தனது ஆசைகளைத் துறக்கின்றனர்.

சமூக இனப் பாகுபாடுகளால் தன்னை ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணிக்கும் மக்கள் மத்தியில் ஏமாற்றங்களால் நொறுங்கிப் போகின்றனர்.

**முடிவுரை:**

தாய் நாட்டிலிருந்து வெளியேறியவர்கள் வெளியேற்றப்பட்டவர்கள் எதிர்கொள்ளும் அகமாற்றங்கள் பற்றியும் புற மாற்றங்கள் பற்றியும் ஆறாம் திணை சிறுகதை உணர்த்திய கருத்துகளைப் பார்த்தோம்.

## மொழியை ஆள்வோம் (பக்கம்.18)

### மொழிபெயர்க்க.

1. **Linguistics** - மொழி ஆராய்ச்சி
2. **Literature** - இலக்கியம்
3. **Philologist** - மொழி ஆராய்ச்சியாளர்
4. **Polyglot** - பன்மொழியாளர்கள்
5. **Phonologist** - ஒலியனியல் வல்லுநர்
6. **Phonetics** - ஒலிப்பியல்

### அடைப்புக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமான வினைமுற்றாக மாற்றி, கோடிட்ட இடங்களில் எழுதுக.

1. இந்திய மொழிகளின் மூலமும் வேருமாகத் தமிழ் **திகழ்கிறது**. (திகழ்)
2. வைதேகி நாளை நடைபெறும் கவியரங்கில் **கலந்துகொள்வாள்.** (கலந்துகொள்)
3. உலகில் மூவாயிரம் மொழிகள் **பேசப்படுகின்றன**. (பேசு)
4. குழந்தைகள் அனைவரும் சுற்றுலாச் **சென்றனர்**. (செல்)
5. தவறுகளைத் **திருத்துவேன்**. (திருத்து)

### வடிவம் மாற்றுக

**பின்வரும் பத்தியைப் படித்துப் பார்த்து, அச்செய்தியை உங்கள் பள்ளி அறிவிப்புப் பலகையில் இடம்பெறும் அறிவிப்பாக மாற்றுக.**

மருதூர் அரசு மேல்நிலைப்பள்ளி இருபத்தைந்து ஆண்டுகளாகச் சிறந்த கல்விப்பணி ஆற்றி வருகிறது. இப்பள்ளி, சிறந்த கவிஞராகத் திகழும் இன்சுவை முதலான பன்முகப் படைப்பாளிகளை உருவாக்கிய பெருமை கொண்டது. ஒரு சோற்றுப் பதமாய் மருதூர்ப் பள்ளி மாணவி பூங்குழலி படைத்த ''உள்ளங்கையில் உலகம்'' என்ற நூலின் வெளியீட்டு விழா 21 ஜூன் திங்கள், பிற்பகல் 3:00 மணியளவில் நடைபெற உள்ளது. அவ்விழாவில் முன்னாள் மாணவர் இன்சுவை (கின்னஸ் சாதனை படைத்த) நூலை வெளியிட்டு, சிறப்புரை ஆற்றுவார். மருதூர்ப் பள்ளி விழா அரங்கத்தில் நிகழும் இந்நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொள்ள அனைவரையும் அழைக்கின்றோம்.

<table>
<tr><td colspan="2" align="center">அறிவிப்புப் பலகை<br>அரசு மேல்நிலைப்பள்ளி, மருதூர்.<br>நூல் வெளியீட்டு விழா</td></tr>
<tr><td>நாள் : 21.06.2019</td><td>நேரம் : பிற்பகல் 3 மணி</td></tr>
<tr><td colspan="2">இடம் : பள்ளி அரங்கம்</td></tr>
<tr><td colspan="2">நூல் : மாணவி. பூங்குழலி படைத்த ''உள்ளங்கை உலகம்''</td></tr>
<tr><td colspan="2">வெளியிட்டுச் சிறப்புரை : கின்னஸ் சாதனை படைத்த முன்னாள் மாணவர் கவிஞர் இன்சுவை அவர்கள்.</td></tr>
<tr><td>அனைவரும் வருக!</td><td>தமிழின்பம் பெறுக!</td></tr>
</table>

## தொடரைப் பழமொழி கொண்டு நிறைவு செய்க.

1. இளமையில் கல்வி **சிலைமேல் எழுத்து**.
2. சித்திரமும் கைப்பழக்கம் **செந்தமிழும் நாப்பழக்கம்**.
3. கல்லாடம் படித்தவரோடு **சொல்லாடாதே**.
4. கற்றோர்க்குச் சென்ற **இடமெல்லாம் சிறப்பு**.

## கடிதம் எழுதுக.

**உங்களின் நண்பர், பிறந்த நாள் பரிசாக அனுப்பிய ''கால்முளைத்த கதைகள்'' (ஆசிரியர் எஸ். ராமகிருஷ்ணன்) என்னும் நூல் குறித்த கருத்துகளைக் கடிதமாக எழுதுக.**

சென்னை-1,
01-01-2020.

அன்புள்ள தோழி,

வணக்கம். நலம் நலமறிய ஆவல். என்னுடைய பிறந்த நாள் பரிசாக நீ அனுப்பிய எழுத்தாளர் இராமகிருஷ்ணன் எழுதிய ''கால் முளைத்த கதைகள்'' என்ற நூல் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி. முப்பது பழங்குடியினர் சொன்ன கதைகளிலிருந்து இத்தொகுப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

உலகம் தோன்றியது எப்படி? என்ற வினாவிற்கு இன்றுவரை தெளிவான விளக்கம் கிடைக்கவில்லை. உலகம் தோன்றியதற்கு இக்கதைகள் வியப்பான பதில்களைத் தருகின்றன.

இந்நூலில் நாய் ஏன் பூனையைத் துரத்துகிறது? கொசு ஏன் கடிக்கிறது? வண்ணத்துப் பூச்சிகள் ஏன் பூக்களைச் சுற்றுகிறது? போன்ற தலைப்புகளில் கதைகள் உள்ளன. குழந்தைகள் மிகவும் விரும்பிப் படிப்பதற்கு ஏற்ற இனிய எளிய சொற்களால் சிறுசிறு கதைகள் அமைந்துள்ளன.

உன் பிறந்த நாளுக்கு இது போன்றதொரு நூலை உனக்கு நானும் அனுப்புவேன். மிக்க மகிழ்ச்சி.

இப்படிக்கு,
உன் அன்புத் தோழி,
த.சுதா.

| **உறைமேல் முகவரி** | **அஞ்சல் தலை** |
|---|---|
| செல்வி. வை. சுபஸ்ரீ,<br>3, தெற்கு மாசி வீதி,<br>மதுரை - 2. | |

## நிகழ்ச்சி நிரல் வடிவமைக்க.

**உங்கள் பள்ளி இலக்கிய மன்றத்தின் சார்பில் நடைபெறவிருக்கும் உலகத் தாய்மொழி நாள் (பிப்ரவரி 21) விழாவிற்கான நிகழ்ச்சி நிரல் ஒன்றினை வடிவமைக்க.**

**உலகத் தாய்மொழி நாள் விழா**

**நாள்** : 21.02.2020 **நேரம்** : முற்பகல் 10 மணி

**நிகழிடம்** : பள்ளிக் கலையரங்கம்

**நிகழ்ச்சி நிரல்**

| | | |
|---|---|---|
| **இறை வணக்கம்** | : | மாணவர்கள் |
| **தமிழ்த்தாய் வாழ்த்து** | : | மாணவர்கள் |
| **வரவேற்புரை** | : | தமிழ் இனியன், மாணவர் மன்ற உறுப்பினர் |
| **தலைமையுரை** | : | புலவர் கவிமுகிலன், தலைமையாசிரியர் |
| **விழா சிறப்புரை** | : | முனைவர் சு.இராமன், பேராசிரியர், பாரதியார் பல்கலைக்கழகம் |
| **வாழ்த்துரை** | : | முனைவர் ம.சுந்தரமூர்த்தி, இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை |
| **நன்றியுரை** | : | க.மணி, தமிழாசிரியர் |

**நாட்டுப்பண்**

## கொடுக்கப்பட்டுள்ள பாடலைப் படித்து நயம் பாராட்டுக.

கவிதையில் உள்ள திரண்ட கருத்து, பொருள் நயம், சொல் நயம், சந்த நயம், தொடை நயம், அணி நயம் ஆகியவை இடம்பெற வேண்டும்.

**விரிகின்ற நெடுவானில், கடற்பரப்பில்**
**விண்ணோங்கு பெருமலையில், பள்ளத்தாக்கில்**
**பொழிகின்ற புனலருவிப் பொழிலில், காட்டில்**
**புல்வெளியில், நல்வயலில், விலங்கில், புள்ளில்**
**தெரிகின்ற பொருளிலெல்லாம் திகழ்ந்து நெஞ்சில்**
**தெவிட்டாத நுண்பாட்டே, தூய்மை ஊற்றே,**
**அழகு என்னும் பேரொழுங்கே, மெய்யே, மக்கள்**
**அகத்திலும் நீ குடியிருக்க வேண்டுவேனே!** **- ம.இலெ.தங்கப்பா**

**திரண்ட கருத்து:**

பரந்த வானம், கடல், மலை, பள்ளத்தாக்கு, அருவி, காடு, புல்வெளி, வயல், விலங்கு போன்ற அனைத்திலும் தூய்மை திகழ்கின்றது. அதுபோல் மக்களின் மனதிலும் தூய்மை குடியிருக்க வேண்டும் என்பதே இப்பாடல் உணர்த்தும் கருத்து ஆகும்.

**மையக்கருத்து:**

இயற்கையின் ஒழுங்கும் அதன் தூய்மையும் வாழ்க்கையின் எல்லாச் சூழல்களிலும் நிலவ வேண்டும். அதுபோலவே மக்களின் மனத்திலும் தூய்மை குடியிருக்க வேண்டும் என்பதையே இப்பாடல் உணர்த்துகிறது.

**மோனைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதலெழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனைத் தொடை ஆகும்.

**எ.கா.** விரிகின்ற........ தெரிகின்ற......
அழகு...
விண்ணோங்கு... தெவிட்டாத.....
அகத்திலும்...

**எதுகைத் தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முதல் எழுத்து அளவொத்து இருக்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது எதுகைத் தொடையாகும்.

**எ.கா.** புல்வெளியில்.. நல்வயலில் (**சீர் எதுகை**)

**முரண்தொடை:**

அடிதோறும் அல்லது சீர்தோறும் முரண்பாடான சொல்லோ, பொருளோ வருவது முரண் தொடை ஆகும்.

**எ.கா. மலையில், பள்ளத்தில்...... முரண்தொடை**

நெடு**வானில்**, **கடற்**பரப்பில்

**இயைபுத்தொடை:**

இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றுபோல் வருவது இயைபுத்தொடையாகும்.

**எ.கா:** விரிகின்ற.......... கடற்பரப்**பில்**

விண்ணோங்கு......... தாக்**கில்**

பொழிகின்ற............. காட்**டில்**

புல்வெளியில்........ புள்**ளில்**

**அணி நயம்:**

இப்பாடலில், விண்ணோங்கு பெருமலையில் என்னும் தொடரில் 'உயர்வு நவிற்சி அணி' பயின்று வந்துள்ளது. மலையை வானுயர்ந்த என்று உயர்வுபடுத்தியுள்ளமையால் அது 'உயர்வு நவிற்சி அணி'யாகும்.

**சுவை நயம்:**

இயற்கையின் அழகு மக்களுக்கு மகிழ்ச்சியைத் தருவதால் இதில் 'உவகைச் சுவை' பயின்று வந்துள்ளது.

**சொல் நயம்:**

'விரிகின்ற நெடுவானில்' எனும் சொல் வானத்தின் விசாலத்தையும் அதன் எல்லையில்லா அழகையும் கவித்துவமாக வெளிப்படுத்துகிறது.

**பொருள் நயம்:**

**''நெஞ்சில் தெவிட்டாத நுண்பாட்டே''**

இப்பாடல் வரி எப்போது கேட்டாலும் சலிப்பை ஏற்படுத்தாத, ஒவ்வொரு முறையும் புதுமையான உணர்வுகளைத் தரும் உயிரோட்டமான பாடல் என உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில் மிக நயமாக பொருள் நயத்துடன் அமைந்தள்ளது.

## மொழியோடு விளையாடு (பக்கம்.20)

### அந்தாதிச் சொற்களை உருவாக்குக.

அத்தி, குருவி, விருது, இனிப்பு, வரிசையாக.

**அத்தி** : திகைப்பு, புகழ்ச்சி, சிரிப்பு, புன்னகை, கைப்பேசி, சிறப்பு, புதுமை, மைனா

**குருவி** : விளக்கு, குரங்கு, குறும்பு, புங்கை, கைதி, திகைப்பு, புடவை, வைப்பு நிதி, திறமை, மைனா

**விருது** : துளசி, சிகப்பு, புதுசு, சுக்கு, குத்து, தும்பை, பைரவி, விருந்து, துண்டு

**இனிப்பு** : புதிது, துலக்கு, குடுமி, மிளகு, குடந்தை, தை மாதம்


**வரிசையாக** : கரும்பு, புலவி, விளக்கு, குடுவை, வைதேகி, கிழமை

### கொடுக்கப்பட்டுள்ள வேர்ச்சொல்லைப் பயன்படுத்தி விடுபட்டுள்ள கட்டங்களில் காலத்திற்கேற்ற வினைமுற்றுகளை நிறைவு செய்க.

| வா | | | |
|---|---|---|---|
| | இறந்த காலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| **நான்** | வந்தேன் | **வருகிறேன்** | **வருவேன்** |
| **நாங்கள்** | **வந்தோம்** | **வருகிறோம்** | வருவோம் |
| **நீ** | **வந்தாய்** | வருகிறாய் | **வருவாய்** |
| **நீங்கள்** | வந்தீர்கள் | **வருகின்றீர்கள்** | **வருவீர்கள்** |
| **அவன்** | **வந்தான்** | வருகிறான் | **வருவான்** |

| | | | |
|---|---|---|---|
| அவள் | வந்தாள் | வருகிறாள் | வருவாள் |
| அவர் | வந்தார் | வருகிறார் | வருவார் |
| அவர்கள் | வந்தார்கள் | வருகிறார்கள் | வருவார்கள் |
| அது | வந்தது | வருகிறது | வரும் |
| அவை | வந்தன | வருகின்றன | வரும் |

## காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



கூண்டிற்குள் சிக்கிய குயில்போலக்

குடுவைக்குள் சிக்கிய சிறுமீனோ!

கூட்டை விட்டுத் தன்னந்தனியாய்த்

தானே முயன்று துள்ளிக் குதிக்கிறது.

## அகராதியில் காண்க.

1. **நயவாமை** - விரும்பாமை
2. **கிளத்தல்** - சிறப்பித்துக் கூறுதல்
3. **கேழ்பு** - நன்மை
4. **செம்மல்** - தலைவன், இறைவன்
5. **புரிசை** - மதில், அரண்

## நிற்க அதற்குத் தக.

**உங்களுடைய நாட்குறிப்பில் இடம்பெற்ற ஒரு வாரத்திற்குரிய மகிழ்ச்சியான செய்திகளைத் தொகுத்து அட்டவணைப்படுத்துக.**

| | |
|---|---|
| திங்கள் | வருத்தம் தெரிவிக்கிறேன், பொறுத்துக் கொள்ளவும் ஆகிய சொற்றொடர்களை இன்று இரண்டு முறை வகுப்பில் பயன்படுத்தினேன். இதனால் புதிய நண்பர் கிடைத்தார். |
| செவ்வாய் | **நான் எழுதிய கட்டுரைக்கு முதற்பரிசு கிடைத்தது. அனைவரும் பாராட்டினர்.** |
| புதன் | **பேருந்தில் பயணிக்கும் போது, என் இருக்கையை முதியவர் ஒருவருக்கு அமர அளித்தேன். மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.** |
| வியாழன் | **விடுபட்ட வீட்டுப் பாடங்களை எழுதினேன்.** |
| வெள்ளி | வீட்டிற்குத் தேவையான பொருள்களை நானாக முன்வந்து வாங்கிக் கொடுத்தேன். அம்மா பாராட்டினார். |
| சனி | **என் அப்பாவுடன் சந்தைக்குச் சென்று வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கிவர அவருக்கு உதவியாக இருந்தேன்.** |
| ஞாயிறு | **உள்ளூர் நூலகத்திற்குச் சென்று கதைப் புத்தகங்கள் படித்தேன்.** |

## படிப்போம்; பயன்படுத்துவோம்!

| | | | |
|---|---|---|---|
| Comparative Grammar | ஒப்பிலக்கணம் | Lexicon | பேரகராதி |
| Vowels | உயிரொலிகள் | Consonants | மெய்யொலிகள் |

## மாதிரிக் கடிதம்

அனுப்புநர்

மு. மகிழன்,
ஒன்பதாம் வகுப்பு – 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சின்கோனா,
வால்பாறை 642 106.

பெறுநர்

வகுப்பு ஆசிரியர் அவர்கள்,
ஒன்பதாம் வகுப்பு – 'அ' பிரிவு,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சின்கோனா,
வால்பாறை 642 106.

ஐயா,

பொருள் : பள்ளி நேரம் முடிவதற்கு முன்பு வீட்டிற்குச் செல்ல அனுமதி வேண்டி– விண்ணப்பித்தல் சார்பு.

வணக்கம். என் தாயார் உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டில் உள்ளார். நான், இன்று மாலை நான்கு மணிக்கு அம்மாவை மருத்துவப் பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. எனவே, இன்று மாலை மூன்று மணிக்குப் பள்ளி நேரம் முடிவதற்கு முன்பே வீட்டிற்குச் செல்ல எனக்கு அனுமதி வழங்குமாறு தங்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள மாணவன்,
XXXXXX

சின்கோனா,
12.06.2025.

பெற்றோர் கையொப்பம்

XXXXXXXXXXXX

கவிதைப்பேழை

# இயல் 1 தமிழ்விடு தூது

## சரியான விடையைத் தேர்க.

1. தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள்
அ) தூது ஆ) பள்ளு
இ) கண்ணி ஈ) அந்தாதி **[இ) கண்ணி]**

2. **1. வண்ணங்கள் - அ) ஒன்பது**
**2. குணங்கள் - ஆ) எட்டு**
**3. வனப்பு - இ) நூறு**
**4. நவரசம் - ஈ) பத்து**
அ) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ
ஆ) 1-ஈ, 2-இ, 3-அ, 4-ஆ
இ) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ
ஈ) 1-அ, 2-ஆ, 3-இ, 4-ஈ
**[அ) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-அ]**

3. **தவறானதைத் தேர்ந்தெடுக்க.**
அ) இராசசம் - சோம்பல் ஆ) வனப்பு - அழகு
இ) தாமசம் - தாழ்மை ஈ) சத்துவம் - அமைதி
**[அ) இராசசம் - சோம்பல்]**

4. **தமிழ்விடு தூது நூலை முதலில் பதிப்பித்தவர்**
அ) தெ.பொ.மீ ஆ) உ.வே.சா
இ) பரிமேலழகர் ஈ) மணக்குடவர்
**[ஆ) உ.வே.சா]**

5. **சிந்தாமணி - என்பதன் இலக்கணக்குறிப்பு**
அ) உருவகம்
ஆ) நான்காம் வேற்றுமைத் தொகை
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
ஈ) வேற்றுமைத்தொகை
**[இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்]**

6. **தமிழ்விடு தூது ______ இலக்கிய வகையைச் சார்ந்தது.**
அ) காப்பியம் ஆ) புதுக்கவிதை
இ) தனிப்பாடல் ஈ) சிற்றிலக்கியம்
**[ஈ) சிற்றிலக்கியம்]**

7. **சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை ______ .**
அ) 96 ஆ) 113 இ) 105 ஈ) 64
**[அ) 96]**

8. **தமிழ்விடு தூதில் அமைந்துள்ள கண்ணிகளின் எண்ணிக்கை**
அ) 862 ஆ) 682 இ) 268 ஈ) 286
**[இ) 268]**

9. **தமிழ்விடுதூது ______ பாவினால் பாடப்பட்டது.**
அ) குறள் வெண்பா ஆ) கலி வெண்பா
இ) இன்னிசை வெண்பா
ஈ) பஃறொடை வெண்பா
**[ஆ) கலி வெண்பா]**

10. **வனப்பு என்பதன் பொருள்**
அ) அழகு ஆ) வரப்பு
இ) வார்ப்பு ஈ) காட்டுப்பூ
**[அ) அழகு]**

11. **வாயில் இலக்கியம் என அழைக்கப்படுவது**
அ) பள்ளு ஆ) பிள்ளைத்தமிழ்
இ) தூது ஈ) அந்தாதி **[இ) தூது]**

12. **சிந்து என்பது ______.**
அ) ஒருவகை இசைப்பாடல்
ஆ) சிதறடிக்காதே
இ) ஒருவகை சித்து விளையாட்டு
ஈ) காவடியாட்டம் **[அ) ஒருவகை இசைப்பாடல்]**

13. **தமிழ்விடு தூதின் ஆசிரியர் யார்?**
அ) மதுரை சொக்கநாதர் ஆ) உ.வே.சா.
இ) யாரெனத் தெரியாது ஈ) ஈரோடு தமிழன்பன்
**[இ) யாரெனத் தெரியாது]**

14. **முத்திக்கனி இலக்கணக் குறிப்பு**
அ) உவமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) உருவகம் ஈ) பண்புத்தொகை
**[இ) உருவகம்]**

15. **தமிழ்விடுதூது இலக்கியத்தைப் பதிப்பித்த ஆண்டு**
அ) 1930 ஆ) 1931 இ) 1929 ஈ) 1946
**[அ) 1930]**

## குறுவினாக்கள்

**1. முத்தமிழ்கள் யாவை?**

➢ இயல்தமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ் ஆகியன முத்தமிழாகும்.

**2. மூவகைப் பாவினங்கள் யாவை?**

➢ துறை, தாழிசை, விருத்தம் ஆகியவை மூவகைப் பாவினங்களாகும்.

**3. முற்றும் உணர்ந்த தேவர்கள் பெற்ற குணங்கள் யாவை?**

➢ முற்றும் உணர்ந்த தேவர்கள் சத்துவம், இராசசம், தாமசம் என்னும் மூன்று குணங்களைப் பெற்றுள்ளார்கள்.

**4. கண்ணி குறிப்பு வரைக.**

➢ இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் வகை கண்ணி ஆகும்.

**5. சிந்தாமணி உணர்த்தும் இரு பொருள்கள் யாவை?**

➢ சிந்தாமணி என்பது சீவக சிந்தாமணி என்னும் இலக்கியத்தையும் சிதறாதமணி (சிந்தாமணி) என்ற பொருளையும் தருகிறது.

**6. தூது இலக்கியத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**

➢ வாயில் இலக்கியம், சந்து இலக்கியம், என்னும் வேறு பெயர்களால் தூது இலக்கியம் அழைக்கப்படுகிறது.

**7. தூது இலக்கியம் குறிப்பு வரைக.**

➢ தலைவன் தலைவியருள் காதல் கொண்ட ஒருவர் மற்றொருவர்பால் செலுத்தும் அன்பைப் புலப்படுத்தித் தம்முடைய கருத்திற்கு உடன்பட்டமைக்கு அறிகுறியாக மாலையை வாங்கி வருமாறு அன்னம் முதல் வண்டு ஈறாகப் பத்தையும் தூது விடுவதாகக் கலிவெண்பாவால் இயற்றப்படுவது தூது இலக்கியம் ஆகும்.

**8. தமிழ்விடு தூது குறிப்பு வரைக.**

➢ மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் ஒருத்தி தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூதுவிடுவதாக அமைந்துள்ளதே தமிழ்விடு தூதாகும்.

## சிறுவினா

**1. தமிழ்விடு தூது நூற்குறிப்பு வரைக.**

➢ தமிழ்விடு தூது 96 வகைச் சிற்றிலக்கியங்களுள் ஒன்று.

➢ இது வாயில் இலக்கியம், சந்து இலக்கியம் என்றெல்லாம் அழைக்கப்படுகிறது.

➢ இதன் ஆசிரியர் யாரெனத் தெரியவில்லை.

➢ இது மதுரையில் கோவில் கொண்டிருக்கும் சொக்கநாதர் மீது காதல் கொண்ட பெண் தன் காதலைக் கூறிவருமாறு தமிழ்மொழியைத் தூது விடுவதுபோல் அமைக்கப்பட்டுள்ளது.

➢ இது கலிவெண்பாவால் இயற்றப்பட்டுள்ளது.

➢ 268 கண்ணிகளைக் கொண்டது.

➢ இதை 1930ல் உ.வே.சா. பதிப்பித்தார்.

உரைநடை உலகம்

# இயல் 1 திராவிட மொழிக்குடும்பம்

## சரியான விடையைத் தேர்க.

1. **இந்திய நாடு மொழிகளின் காட்சிச் சாலையாகத் திகழ்கிறது என்று குறிப்பிட்டவர்.**
அ) குமரிலபட்டர் ஆ) ஹீராஸ் பாதிரியார்
இ) அகத்தியலிங்கம் ஈ) கால்டு வெல்
**[இ) அகத்தியலிங்கம்]**

2. **திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எனும் நூல் வெளியான ஆண்டு.**
அ) 1856 ஆ) 1855 இ) 1854 ஈ) 1578
[அ) 1856]

3. **ஐரோப்பிய மொழியோடு தொடர்புடையது வடமொழி என்று முதலில் கூறியவர்.**
அ) பிரான்சிஸ் எல்லிஸ் ஆ) வில்லியம் ஜோன்ஸ்
இ) ஹோக்கன் ஈ) எமினோ
**[ஆ) வில்லியம் ஜோன்ஸ்]**

4. **'தமிழ் வடமொழியின் மகளன்று; அது தனிக்குடும்பத்திற்குரிய மொழி' - இது யார் கூற்று?**
அ) கால்டுவெல் ஆ) ஜி.யு.போப்
இ) எமினோ ஈ) எல்லீஸ்
**[அ) கால்டுவெல்]**

5. **கீழ்வருவனவற்றுள் நடுத்திராவிட மொழி எது?**
அ) தமிழ் ஆ) தெலுங்கு
இ) கன்னடம் ஈ) துளு **[ஆ) தெலுங்கு]**

6. **மூன்று எனும் எண்ணுப்பெயர் கன்னடத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?**
அ) மூஜி ஆ) மூடு
இ) மூரு ஈ) மூணு **[இ) மூரு]**

7. **கூற்று 1 :** திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை என்றவர் கால்டுவெல்
**கூற்று 2 :** திராவிடம் என்ற சொல்லை முதலில் குறிப்பிட்டவர் குமரிலபட்டர்
அ) கூற்று 1 தவறு 2 சரி ஆ) கூற்று 1 சரி 2 தவறு
இ) கூற்று 1, 2 சரி ஈ) கூற்று 1, 2 தவறு
**[இ) கூற்று 1, 2 சரி]**

8. **தமிழ், தெலுங்கு உள்ளிட்ட மொழிகளை ஒரே இனமாகக் கருதித் 'தென்னிந்திய மொழிகள்' என்று பெயரிட்டவர்**
அ) பிரான்சிஸ் எல்லிஸ் ஆ) ஹோக்கன்
இ) மாக்ஸ்முல்லர் ஈ) எமினோ
**[அ) பிரான்சிஸ் எல்லிஸ்]**

9. **திராவிட மொழிகளைத் தென்திராவிட மொழிகள், நடுத்திராவிட மொழிகள், வடதிராவிட மொழிகள் என எதன் அடிப்படையில் பகுத்தனர்.**
அ) இட அமைப்பு ஆ) இயற்கை அமைப்பு
இ) ஒலி அடிப்படையில்
ஈ) பரவிய நில அடிப்படையில்
**[ஈ) பரவிய நில அடிப்படையில்]**

10. **தமிழ் மொழியின் மிகப்பழமையான இலக்கியம் எது?**
அ) இதிகாசங்கள் ஆ) சங்க இலக்கியம்
இ) காப்பியங்கள் ஈ) புதினங்கள்
**[ஆ) சங்க இலக்கியம்]**

11. **மலையாள மொழியின் பழமையான இலக்கண நூல் எது?**
அ) தொல்காப்பியம் ஆ) கவிராஜ மார்க்கம்
இ) லீலா திலகம் ஈ) அகத்தியம்
**[இ) லீலா திலகம்]**

12. **ஆந்திர பாஷா பூஷணம் என்னும் இலக்கண நூல் தோன்றிய காலம்**
அ) 9ஆம் நூற்றாண்டு ஆ) 11 ஆம் நூற்றாண்டு
இ) 5 ஆம் நூற்றாண்டு ஈ) 12 ஆம் நூற்றாண்டு
**[ஈ) 12 ஆம் நூற்றாண்டு]**

## கோடிட்ட இடங்களை நிரப்புக.

13. உலகில் குறிப்பிடத்தக்க பழமையான நாகரிகங்களுள் ------ ஒன்று. - **இந்திய நாகரிகமும்**
14. ----- ஆம் ஆண்டில் பாப், ராஸ்க், கிரிம் முதலானோரால் மொழி சார்ந்த பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. - 1816
15. திராவிட மொழிகளில் ---- தன்மையை ஒட்டிப் பால் பாகுபாடு அமைந்துள்ளது. - **பொருள்களின்**
16. தமிழ் ------ மொழியின் பண்புகள் பலவற்றைப் பேணிப்பாதுகாத்து வருகிறது. - **மூலத்திராவிட**

## குறுவினாக்கள்

1. **இந்தியாவை மொழிகளின் காட்சிச்சாலை என்றழைப்பதேன்?**
   - இந்தியாவில் பல்வேறு மொழிகளும் பல கிளை மொழிகளும் பேசப்படுவதால் இந்திய நாட்டை மொழிகளின் காட்சிச்சாலை என அழைக்கிறோம்.

2. **அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகள் யாவை?**
   - எருகலா, தங்கா, குறும்பா, சோழிகா ஆகியன அண்மையில் கண்டறியப்பட்ட திராவிட மொழிகளாகும்.

3. **தென்திராவிட மொழிகள் யாவை?**
   - தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா ஆகியன தென்திராவிட மொழிகளாகும்.

4. **வடதிராவிட மொழிகள் யாவை?**
   - குரூக், மால்தோ, பிராகுய் ஆகியன வடதிராவிட மொழிகளாகும்.

5. **திராவிட மொழிக்குடும்பம் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளது?**
   - மொழிகள் பரவிய நில அடிப்படையில் மூன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.
     - தென்திராவிட மொழிகள்
     - நடுத்திராவிட மொழிகள்
     - வடதிராவிட மொழிகள்

   ஆகியவை திராவிட மொழிக்குடும்பமாகும்.

6. **திராவிட மொழிகளின் பழமையான இலக்கியங்களைக் கூறுக.**

   **திராவிட மொழிகளின் பழமையான இலக்கியங்கள்:**
   - தமிழ் - சங்க இலக்கியம்
   - தெலுங்கு - பாரதம்
   - கன்னடம் - கவிராஜ மார்க்கம்
   - மலையாளம் - ராம சரிதம்

7. **இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள் யாவை?**

   **இந்தியாவில் பேசப்படும் மொழிக்குடும்பங்கள்:**
   - இந்தோ - ஆசிய மொழிகள்
   - திராவிட மொழிகள்
   - ஆஸ்திரோ ஆசிய மொழிகள்
   - சீன - திபெத்திய மொழிகள்

8. **தமிழ் குறித்து ஹீராஸ் பாதிரியார் கூறுவது யாது?**
   - தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா என மாற்றம் பெற்றது என்று ஹீராஸ் பாதிரியார் கூறுகிறார்.

9. **திராவிட மொழிகளின் பழமையான இலக்கண நூல்களைக் குறிப்பிடுக.**

   **திராவிட மொழிகளின் பழமையான இலக்கண நூல்கள்:**
   - தமிழ் - தொல்காப்பியம்
   - மலையாளம் - லீலா திலகம்
   - கன்னடம் - கவிராஜ மார்க்கம்
   - தெலுங்கு - ஆந்திர பாஷா பூஷணம்

## சிறுவினாக்கள்

1. **திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் யாவர்?**
   - கால்டுவெல், ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் முதலியோர் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

2. **திராவிட மொழிகளின் பொதுப் பண்புகள் யாவை?**

- திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டுள்ளன.
- **சான்று :** கண் - தமிழ், கண்ணு - மலையாளம், கன்னடம், கன்னு - தெலுங்கு, குடகு, ஃகன் - குரூக், கெண் - பர்ஜி, கொண் - தோடா.
- திராவிட மொழிகளில் எண்ணுப்பெயர்கள் ஒன்று போலவே உள்ளன. மூன்று - தமிழ், மூணு - மலையாளம், மூடு - தெலுங்கு, மூரு - கன்னடம், மூஜி - துளு.
- திராவிட மொழிகளில் உயிர் எழுத்துகளில் குறில், நெடில் வேறுபாடுகள் பொருளை வேறுபடுத்தத் துணை செய்கின்றன.
  **எ.கா:** அடி- குறில், ஆடி - நெடில், வளி - குறில், வாளி - நெடில்.

---

3. **திராவிட மொழிகளின் பால் பாகுபாடு குறித்து விளக்குக.**

- திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது.
- திராவிட மொழிகளில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு உயர்திணை ஒருமையில் காணப்படுகிறது.
- அஃறிணைப் பொருள்களையும் ஆண், பெண் என்று பால் அடிப்படையில் பகுத்தாலும் அவற்றிற்கெனப் பால் காட்டும் விகுதிகள் இல்லை.
- தனிச்சொற்களாலேயே ஆண், பெண் என்ற பகுப்பை உணர்த்தினர்.

---

4. **மொழியின் தோற்றம் குறித்து எழுதுக.**

- தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த மனிதன் கண்டுபிடித்த கருவியே மொழியாகும்.
- தம் எண்ணங்களை மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் மூலமாகப் பிறருக்குத் தெரிவிக்க முயன்றனர்.
- இவற்றின் மூலம் பருப்பொருட்களை மட்டுமே உணர்த்த முடிந்தது. நுண் பொருள்களை உணர்த்த முடியவில்லை.
- அதனால் ஒலியை உண்டாக்கிப் பயன்படுத்தத் தொடங்கினான்.
- சைகையோடு சேர்ந்து பொருள் உணர்த்திய ஒலி காலப்போக்கில் தனியாகப் பொருள் உணர்த்தும் வலிமை பெற்று மொழியாக வளர்ந்தது.

---

## நெடுவினா

1. **திராவிட மொழிக்குடும்பம் தோன்றிய வரலாற்றைக் கூறுக.**

- உலகில் குறிப்பிடத்தக்க பழைமையான நாகரிகங்களுள் இந்திய நாகரிகமும் ஒன்று என்று ஹரப்பா மொகஞ்சதாரோ அகழாய்வுக்குப் பின்னர் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.
- இதைத் திராவிட நாகரிகம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.
- 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கம்வரை இந்திய மொழிகள் அனைத்திற்கும் வடமொழியே மூலம் எனவும் அதிலிருந்தே மற்றமொழிகள் தோன்றி வளர்ந்தன எனவும் அறிஞர்கள் கருதினர்.
- அறிஞர் வில்லியம் ஜோன்ஸ் வடமொழியை ஆராய்ந்து வடமொழி ஐரோப்பிய மொழிகளோடு தொடர்புடையது என்று குறிப்பிட்டார்.
- முதன்முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகள் தனி மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்று கூறினார்.
- கால்டுவெல் திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலில் திராவிட மொழிகள் ஆரிய மொழிக்குடும்பத்திலிருந்து வேறுபட்டவை எனவும், இம்மொழிகள் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதைப் பல்வேறு இலக்கணக் கூறுகளைச் சுட்டிக்காட்டி விளக்கினார்.
- கால்டுவெல்லுக்குப் பின்னர் ஸ்டென்கனோ, கே.வி.சுப்பையா, எல்.வி.இராமசுவாமி, பரோ, எமினோ, கமில்சுவலபில், ஆந்திரனோவ், தெ.பொ.மீனாட்சி சுந்தரம் முதலான அறிஞர்கள் திராவிட மொழிகளின் ஆய்விற்குப் பங்களிப்புச் செய்தனர்.

2. **தமிழ்மொழியின் தனித்தன்மைகளை விளக்குக.**

- தொன்மையும் இலக்கண இலக்கிய வளமும் உடைய மொழி.
- இலங்கை, இந்தோனேஷியா, பிஜித்தீவு, தென் ஆப்பிரிக்கா, மொரிஷியஸ், இங்கிலாந்து, கயானா, மடகாஸ்கர், ட்ரினிடாட், ஆஸ்திரேலியா, கனடா போன்ற நாடுகளிலும் பேசப்படும் பெருமை உடையது.
- தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழி.
- பிறமொழிக் கலப்பின்றித் தனித்து இயங்கும் மொழி.
- பிறமொழித்தாக்கம் குறைவாக உள்ள மொழி.
- ஒரு பொருள் குறித்த பல சொற்களைப் பெற்றுச் சொல்வளமும், சொல்லாட்சியும் நிரம்பப் பெற்ற மொழி.
- இந்தியாவின் தொன்மையான கல்வெட்டுகளில் பெரும்பாலானவை தமிழ்க்கல்வெட்டுகளே.
- தமிழின் பல அடிச்சொற்களின் ஒலியன்களிலிருந்தே பிற திராவிட மொழிகள் 'ஒலி இடம்பெயர்தல் என்ற விதிப்படி' வடிவம் பெற்றிருக்கின்றன.
- எண்பது விழுக்காடு அளவுக்குத் திராவிட மொழிக்கூறுகளைக் கொண்ட ஒரே திராவிட மொழி தமிழ்.
- திராவிட மொழிக்குடும்பத்தின் தொன்மையான மூத்த மொழி.
- தனித்தன்மை மாறுபடாமல் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் பண்பு கொண்ட மொழி.

# இயல் 1

**கவிதைப்பேழை**

# தமிழோவியம்

*– ஈரோடு தமிழன்பன்*

## சரியான விடையைத் தேர்க.

1. **ஈரோடு தமிழன்பனின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நூல்.**
அ) தமிழோவியம் ஆ) வணக்கம் வள்ளுவ
இ) தமிழன்பன் கவிதைகள் ஈ) இனிமைத்தமிழ்
**[ஆ) வணக்கம் வள்ளுவ]**

2. **'இனிமையும் நீர்மையும் தமிழெனல்' ஆகும். இத்தொடர் இடம் பெற்ற நூல்**
அ) தமிழோவியம் ஆ) பிங்கல நிகண்டு
இ) தமிழ் விடு தூது ஈ) புறநானூறு
**[ஆ) பிங்கல நிகண்டு]**

3. **காலம் பிறக்கும் முன் பிறந்தது.**
அ) இலக்கியங்கள் ஆ) இலக்கணங்கள்
இ) தமிழ் ஈ) தொல்காப்பியம்
**[இ) தமிழ்]**

4. **தமிழை ஆட்சி மொழியாகக் கொண்ட நாடுகளுள் ஒன்று**
அ) இந்தியா ஆ) சிங்கப்பூர்
இ) மொரிசியஸ் ஈ) கனடா
**[ஆ) சிங்கப்பூர்]**

5. **தமிழோவியம் என்னும் கவிதை நூலின் ஆசிரியர் யார்?**
அ) தமிழ்த்தாத்தா உ.வே.சா.
ஆ) ஈரோடு வெங்கடப்பர் மகன் இராமசாமி
இ) ஈரோடு தமிழன்பன் ஈ) பாரதிதாசன்
**[இ) ஈரோடு தமிழன்பன்]**

6. **வணக்கம் வள்ளுவ என்ற நூலுக்கு சாகித்திய அகாதெமி விருது வழங்கிய ஆண்டு**
அ) 2001 ஆ) 2002 இ) 2003 ஈ) 2004
**[ஈ) 2004]**

7. **உலகத் தாய்மொழி நாள்**
அ) ஜனவரி 21 ஆ) பிப்ரவரி 21
இ) மார்ச் 21 ஈ) ஏப்ரல் 21
**[ஆ) பிப்ரவரி 21]**

8. ‘காலமும்’ என்பதன் இலக்கணக் குறிப்பு
அ) வினைமுற்று ஆ) உம்மைத்தொகை
இ) முற்றும்மை ஈ) பெயரெச்சம்
**[இ) முற்றும்மை]**

9. ‘‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்’’ என்று பாடியவர்
அ) பாரதியார் ஆ) பாரதிதாசன்
இ) கண்ணதாசன் ஈ) தாராபாரதி
**[அ) பாரதியார்]**

10. ஈரோடு தமிழன்பனின் தமிழக அரசின் பரிசு பெற்ற நூல் ----- -.
அ) இலக்கிய வரலாறு ஆ) சிறுகதை
இ) தமிழன்பன் கவிதைகள்
ஈ) வணக்கம் வள்ளுவ **[இ) தமிழன்பன் கவிதைகள்]**

11. மானிட மேன்மையைச் சாதித்திடத் ------ மட்டுமே போதுமே.
அ) சிலப்பதிகாரம் ஆ) கம்பராமாயணம்
இ) தொல்காப்பியம் ஈ) திருக்குறள் **[ஈ) திருக்குறள்]**

## குறுவினாக்கள்

1. **ஏன் குறைகள் சொல்வதை விட்டுவிட வேண்டும்?**
   - விரல்களை மடக்கிக் கொண்டு வீணையில் இசை பொழிய முடியாததைப் போல, பிறர் குறைகள் பேசுவதைத் தவிர்த்துப் புதிய வடிவம் பெற்ற தமிழை வளர்க்க வேண்டும்.

2. **ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதை வடிவங்கள் யாவை?**
   - புதுக்கவிதைகள், ஹைக்கூ கவிதைகள், சென்ரியு கவிதைகள், லிமரைக்கூ கவிதைகள் ஆகிய கவிதை வடிவங்களில் ஈரோடு தமிழன்பன் கவிதைகள் எழுதியுள்ளார்.

3. **ஈரோடு தமிழன்பனின் கவிதைகள் எந்தெந்த மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன?**
   - தமிழன்பனின் கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் உள்ளிட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

4. **தமிழ்மொழியின் தொன்மை குறித்து ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது யாது?**
   - காலம் பிறப்பதற்கு முன்பே தனிச்சிறப்புடன் பிறந்த மொழி தமிழ்மொழி. எந்தக் காலமும் நிலைபெற்று நிற்கும் மொழியும் தமிழ்மொழியே என ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

5. **காப்பியங்களின் சிறப்புக் குறித்து ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுவது யாது?**
   - தமிழ் மொழியில் தோன்றிய காப்பியங்களுக்கு இணையான காப்பியங்கள் வேறு எந்த மொழியிலும் தோன்றவில்லை, என்பதை எண்ணி உள்ளம் மகிழ்கிறது என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

6. **குறளின் சிறப்புக் குறித்து தமிழன்பன் குறிப்பிடுவது யாது?**
   - குறள் கூறும் கருத்துகளைக் கற்று அதன்படி நடந்தால் மனித வாழ்வு மேன்மைபெறும் என்று ஈரோடு தமிழன்பன் குறிப்பிடுகிறார்.

7. **சமயங்கள் வளர்ச்சிபெற தமிழ் மொழியின் பங்கு யாது?**
   - ஒரு தாய் எப்படித் தனது குழந்தையைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பாளோ அதுபோல எல்லாச் சமயங்களையும் பாதுகாத்து வளர்த்த பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

## சிறுவினா

1. **ஈரோடு தமிழன்பனின் படைப்புகளைப் பற்றி எழுதுக.**
   - இவர் புதுக்கவிதை, சிறுகதை முதலான பல வடிவங்களில் படைப்புகளை வெளியிட்டுள்ளார்.
   - ஹைக்கூ, சென்ரியு, லிமரைக்கூ எனப் புதுப்புது வடிவங்களில் கவிதை நூல்களைத் தந்துள்ளார்.
   - இவரது ‘வணக்கம் வள்ளுவ’ என்னும் கவிதை நூலுக்கு 2004-ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது வழங்கப்பட்டது.
   - இவரது ‘தமிழன்பன் கவிதைகள்’ நூல் தமிழக அரசின் பரிசினைப் பெற்றுள்ளது.
   - இவரது கவிதைகள் இந்தி, உருது, மலையாளம், ஆங்கிலம் போன்ற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## நெடுவினா

1. **தமிழோவியம் என்னும் கவிதை மூலம் ஈரோடு தமிழன்பன் உணர்த்தும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.**

**தமிழின் தொன்மை:**

- காலம் பிறப்பதற்கு முன்பே தனிச் சிறப்புடன் பிறந்த மொழி நம் தமிழ்மொழி.
- எந்தக் காலமும் நிலைத்து நிற்கும் மொழியும் நம் தமிழ்மொழியே.

**இலக்கிய இலக்கணச் சிறப்பு:**

- தமிழ்மொழியில் தோன்றிய காப்பியங்களுக்கு இணையான காப்பியங்களை வேறு எந்த மொழியிலும் பார்க்க முடியாது அத்தகைய சிறப்பு வாய்ந்தது.
- மனிதனின் வாழ்வியல் இலக்கணங்களைக் கூறும் குறளைக் கற்று அதன்படி நடந்தால் மனித வாழ்வு மேன்மை பெறும்.
- எல்லாச் சமயங்களையும் வளர்த்த பெருமை தமிழ்மொழிக்கே உண்டு.
- சமுதாய இருளைப் போக்கும் புதுச் சிந்தனைகளைச் சித்தர் பாடல்கள் உணர்த்துகின்றன.
- மனித வாழ்வியலின் அகவாழ்க்கையையும், புற வாழ்க்கையையும் பற்றிக் கூறும் சங்க இலக்கியங்களைப் பெற்ற மொழி தமிழ்மொழி.
- மனிதனின் அகப்புற வாழ்க்கையைப் பாடும் இலக்கியங்கள் இத்தகையதாக இருக்க வேண்டும் என்ற இலக்கணத்தைக் கூறுகின்றன இலக்கண நூல்கள்.

**வேண்டுகோள்:**

- விரல்களை மடக்கிக் கொண்டு வீணையில் இசை வரவில்லை என்று கூறுபவனைப் போல, குறைகளைச் சொல்வதை விட்டுவிட்டு புதிய புதிய வடிவில் தமிழை வளர்க்க முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கிறார்.

---

**விரிவானம்**

# இயல் 1 ஆறாம் திணை

–அ. முத்துலிங்கம்

## சரியான விடையைத் தேர்க.

1. **அ.முத்துலிங்கம் இலங்கையில் எங்கு பிறந்தார்?**
அ) யாழ்ப்பாணத்தில் ஆ) புங்குடுத்தீவில்
இ) கொக்குவில் ஈ) லவுண்யா
**[இ) கொக்குவில்]**

2. **ராபின்சன் குரூசோ - என்ற நூலின் ஆசிரியர் யார்?**
அ) டேனியல் டிஃபோ ஆ) இந்திரன்
இ) சாண்டில்யன் ஈ) டேனியல் டிகூசா
**[அ) டேனியல் டிஃபோ]**

3. **கடல்புறா என்னும் நூலின் ஆசிரியர் யார்?**
அ) அகிலன் ஆ) இந்திரன்
இ) சாண்டில்யன் ஈ) புதுமைப்பித்தன்
**[இ) சாண்டில்யன்]**

4. **ஓர் இனத்தை அழிப்பதற்கு அவர்கள் நூலை எரித்தால் போதும் - என்று குறிப்பிடும் நூல் எது?**
அ) ஃபாரன்ஹீட் 451 ஆ) ஃபாரன்ஹீட் 461
இ) ஃபாரன்ஹீட் 541 ஈ) ஃபாரன்ஹீட் $100^{0}$
**[அ) ஃபாரன்ஹீட் 451]**

5. **தமிழர் பாரம்பரிய நாள் எது?**
அ) ஜனவரி 14 ஆ) பிப்ரவரி - 14
இ) நவம்பர் - 14 ஈ) டிசம்பர் 14
**[அ) ஜனவரி 14]**

6. **உலகின் 2-வது பெரிய தேசம் எது?**
அ) அமெரிக்கா ஆ) இந்தியா
இ) கனடா ஈ) சீனா **[இ) கனடா]**

7. **ஜி.யு.போப் பிறந்த நாடு எது?**
அ) அமெரிக்கா ஆ) இந்தியா
இ) கனடா ஈ) இத்தாலி **[இ) கனடா]**

8. **உலகம் முழுவதும் எத்தனை கோடி தமிழர்கள் இருக்கிறார்கள்?**
அ) 10 கோடி ஆ) 8 கோடி
இ) 6 கோடி ஈ) 9 கோடி **[ஆ) 8 கோடி]**

9. **சூரியன் மறையாத அரசு என அழைக்கப்பட்ட அரசு எது?**
அ) கனடா
ஆ) பிரிட்டன் (பிரித்தானியம்)
இ) இத்தாலி ஈ) நார்வே
**[ஆ) பிரிட்டன் (பிரித்தானியம்)]**

10. **அ.முத்துலிங்கத்தின் சிறுகதைத் தொகுப்பில் இலங்கை அரசின் சாகித்யப் பரிசினைப் பெற்ற நூல் எது?**
அ) வடக்கு வீதி ஆ) வம்சவிருத்தி
இ) மகாராஜாவின் ரயில் வண்டி ஈ) அக்கா
**[அ) வடக்கு வீதி]**

11. **ஆறாம் திணை எது?**
அ) பனியும் - பனிசார்ந்த இடமும்
ஆ) மணலும் மணல் சார்ந்த இடமும்
இ) காடும் காடு சார்ந்த இடமும்
ஈ) மழையும் மழை சார்ந்த இடமும்
**[அ) பனியும் - பனிசார்ந்த இடமும்]**

12. **அகதிகள் கூடத்தில் மதிய உணவிற்காக யாரைப்போல் நின்றதாக முத்துலிங்கம் கூறுகிறார்?**
அ) மறியல் கைதிகள் ஆ) சிறை கைதிகள்
இ) ஆயுள் கைதிகள்
ஈ) தூக்குத்தண்டனை கைதிகள்
**[அ) மறியல் கைதிகள்]**

13. **காகத்திற்குப் பறக்கும் எல்லை ______ தூரம்.**
அ) 10 மைல் ஆ) 4 மைல்
இ) 2 மைல் ஈ) 3 மைல் **[இ) 2 மைல்]**

14. **கனடாவில் வாழும் தமிழர்களின் எண்ணிக்கை**
அ) 3 இலட்சம் ஆ) 7 இலட்சம்
இ) 4 இலட்சம் ஈ) 5 இலட்சம்
**[அ) 3 இலட்சம்]**

15. **கொக்குவில் கிராமத்தில் காணப்பட்ட பறவைகள்**
அ) ஆறுமணிக்குருவி - கழுகு
ஆ) ஆறுமணிக்குருவி - வானம்பாடி
இ) ஆறுமணிக்குருவி - காகம்
ஈ) ஆறுமணிக்குருவி - புறா
**[இ) ஆறுமணிக்குருவி - காகம்]**

16. **பின்வருவனவற்றில் அ.முத்துலிங்கம் எழுதாத சிறுகதைத் தொகுப்பு**
அ) சித்தன் போக்கு ஆ) திகடசக்கரம்
இ) அக்கா
ஈ) மகாராஜாவின் ரயில்வண்டி
**[அ) சித்தன் போக்கு]**

17. **1981-ஆம் ஆண்டு மே மாதம் 31-ஆம் நாள் தமிழரால் மறக்க இயலாத நிகழ்வு**
அ) யாழ்ப்பாணம் போர்
ஆ) அகதிகள் படுகொலை
இ) தமிழர் படுகொலை ஈ) நூல்கள் எரிப்பு
**[ஈ) நூல்கள் எரிப்பு]**

18. எதனைச் சாகடித்தால் மனிதன் செத்துவிடுவான்? **- அறிவை**

19. தமிழர் திருநாளாக ஜனவரி 14 ஆம் நாளை எந்த ஆண்டு அறிவித்தார்கள்? - 2012

20. வன்னி வீதி எங்கு உள்ளது? **- கனடாவில்**


21. ஒவ்வொரு திணைக்கும் நூறு பாடல்களைக் கொண்ட நூல் எது? **- ஐங்குறுநூறு**

22. ஆறு மணிக்குருவி எவ்வளவு தூரம் வரை பறக்கும்? **- எல்லையே கிடையாது**

23. அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடசக்கரம் - சிறுகதைகளின் ஆசிரியர் **- அ.முத்துலிங்கம்**

## கற்பவை கற்றபின் (பக்கம்.15)

நாளிதழ்களில் வெளியாகும் புலம்பெயர் மக்கள் பற்றிய செய்திகளைத் திரட்டிப் படத்தொகுப்பாக்குக.



கற்கண்டு

# இயல் 1 எழுத்து – அளபெடை

### சரியான விடையைத் தேர்க.

1. 'அளபெடை' என்னும் சொல்லுக்குப் பொருள்

அ) குறுகி ஒலித்தல் ஆ) நீண்டு ஒலித்தல்

இ) இனிய ஓசை ஈ) அளவாக ஒலித்தல்

**[ஆ) நீண்டு ஒலித்தல்]**

2. உயிரளபெடை ---- வகைப்படும்.

அ) இரண்டு ஆ) மூன்று

இ) நான்கு ஈ) ஐந்து **[ஆ) மூன்று]**

3. செய்யுளிசை அளபெடையின் வேறு பெயர்

அ) இசைநிறை ஆ) இன்னிசை

இ) சொல்லிசை ஈ) ஒற்றளபெடை

**[அ) இசைநிறை]**

4. பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது.
அ) செய்யுளிசை அளபெடை
ஆ) இன்னிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை
[இ) சொல்லிசை அளபெடை]

5. 'ஓஒதல்' 'உறாஅர்க்கு' - இதில் அமைந்த அளபெடை
அ) இன்னிசை ஆ) இசைநிறை
இ) சொல்லிசை ஈ) ஒற்றளபெடை
[ஆ) இசைநிறை]

## குறுவினா

1. **சார்பெழுத்தின் வகைகளைக் குறிப்பிடுக.**
   - உயிர்மெய்
   - ஆய்தம்
   - உயிரளபெடை
   - ஒற்றளபெடை
   - குற்றியலுகரம்
   - குற்றியலிகரம்
   - ஐகாரக்குறுக்கம்
   - ஔகாரக்குறுக்கம்
   - மகரக்குறுக்கம்
   - ஆய்தக்குறுக்கம்

2. **அளபெடுத்தல் என்றால் என்ன?**
   - சொற்கள் நீண்டு ஒலிப்பது அளபெடுத்தல் எனப்படும்.


3. **செய்யுளிசை அளபெடையை விளக்குக.**
   - செய்யுளில் ஓசை குறையும்போது அதை நிறைவு செய்ய செய்யுளில் வந்துள்ள நெட்டெழுத்துகள் அளபெடுப்பதை (நீண்டு ஒலிப்பதை) செய்யுளிசை அளபெடை என்பர்.
   - இதனை இசைநிறை அளபெடை என்றும் அழைப்பர்.
   - எ.கா. ஓஒதல்

4. **சொல்லிசை அளபெடையை விளக்குக.**
   - செய்யுளில் ஒரு பெயர்ச்சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது சொல்லிசை அளபெடை ஆகும்.
   - எ.கா. உரனசைஇ - (நசை - விருப்பம், நசைஇ - விரும்பி)

5. **அளபெடை எத்தனை வகைப்படும் அவை யாவை?**
   - அளபெடை இரண்டு வகைப்படும்.
   - அவை உயிரளபெடை, ஒற்றளபெடை

6. **ஒற்றளபெடையை விவரி?**
   - செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய மெய்யெழுத்துகளான ங், ஞ், ண், ந், ம், ன், ய், ல், வ், ள் ஆகிய பத்தும் ஃ என்னும் ஆய்த எழுத்தும் அளபெடுப்பது ஒற்றளபெடை ஆகும்.

   எ.கா. எஃஃகிலங்கிய, கலங்ங்கினான்.



## பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

1. அகமாய்ப் புறமாய் இலக்கியங்கள் - அவை
அமைந்ததைச் சொல்லும் இலக்கணங்கள்
நிகரிலாக் காப்பியப் பூவனங்கள் - உன்
நெஞ்சம் நடத்தட்டும் ஊர்வலங்கள்

அ) பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) பூவனங்கள் என்று எதனைக் குறிப்பிடுகிறார்?
இ) 'நிகரிலா' இலக்கணக்குறிப்பு தருக.

விடை:
அ) அகமாய்ப்.......
அமைந்ததைச்........
ஆ) காப்பியங்கள்
இ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

2. ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி
ஏந்திய தீபமாய்ப் பாட்டுவரும்
மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்
மட்டுமே போதுமே ஓதிநட......

அ) பாடலில் இடம் பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்து எழுதுக.
ஆ) பாடலில் வந்துள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
இ) இப்பாடலில் கூறப்பட்டுள்ள இலக்கியம் எது?

விடை:
அ) ஏனிவ் விருட்டெனக் கேட்டுவரும் - நீதி
மானிட மேன்மையைச் சாதித்திடக் - குறள்
ஆ) ஏனிவ்.......
ஏந்திய......
இ) திருக்குறள்

3. எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஏந்தி வளர்ந்தது தாயெனவே
சித்தர் மரபிலே தீதறுக்கும் - புதுச்
சிந்தனை வீச்சுகள் பாய்ந்தனவே

அ) பாடலில் இடம்பெற்றுள்ள மோனையை எடுத்தெழுதுக.
ஆ) ஏந்தி - இலக்கணக் குறிப்பு தருக.
இ) 'தீது' - பொருள் தருக.

விடை:
அ) எத்தனை எத்தனை சமயங்கள் - தமிழ்
ஆ) வினையெச்சம்
இ) தீமை, குற்றம், துன்பம்

4. விரலை மடக்கியவன் இசையில்லை - எழில்
வீணையில் என்று சொல்வதுபோல்
குறைகள் சொல்வதை விட்டுவிட்டுப் புதுக்
கோலம் புனைந்து தமிழ் வளர்ப்பாய்

அ) விட்டுவிட்டு - இலக்கணக்குறிப்பு தருக.
ஆ) இப்பாடல் வரிகள் உணர்த்தும் அணி எது?
இ) எதை விட்டுவிட வேண்டும்?

விடை:
அ) அடுக்குத்தொடர்
ஆ) உவமையணி
இ) குறைகள் சொல்வதை

5. தித்திக்கும் தெள்அமுதாய்த் தெள்அமுதின் மேலான
முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
விண்ணப்பம் உண்டு விளம்பக்கேள்

அ) பாடலில் இடம்பெற்றுள்ள மோனைச் சொற்களை எழுது.
ஆ) முத்தமிழ் - விரித்து எழுது.
இ) முத்திக்கனி - இலக்கணக்குறிப்பு தருக.

விடை:
அ) முத்திக் கனியேஎன் முத்தமிழே - புத்திக்குள்
உண்ணப் படும்தேனே உன்னோடு உவந்து உரைக்கும்
ஆ) மூன்று + தமிழ் - இயல், இசை, நாடகம்
இ) உருவகம்

6. குறம்என்றும் பள்ளுஎன்றும் கொள்வார் கொடுப்பாய்க்கு
உறவுஎன்று மூன்றுஇனத்தும் உண்டோ - திறம்எல்லாம்
வந்துஎன்றும் சிந்தாமணியாய் இருந்த உனைச்
சிந்துஎன்ற சொல்லிய நாச்சிந்துமே.

அ) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுது.
ஆ) சிந்தாமணி - இலக்கணக்குறிப்பு தருக.
இ) சிந்தாமணி என்னும் சொல் உணர்த்தும் காப்பியம் எது?

விடை:
அ) குறம் என்றும்........
உறவு என்று........
வந்து என்றும்........
சிந்து என்று........
ஆ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
இ) சீவகசிந்தாமணி

7. காடெல்லாம் கழைக்கரும்பு காவெல்லாம் குழைக்கரும்பு
மாடெல்லாம் கருங்குவளை வயலெல்லாம் நெருங்குவளை
கோடெல்லாம் மடஅன்னம் குளமெல்லாம் கடல்அன்ன
நாடெல்லாம் நீர்நாடு தனைஒவ்வா நலமெல்லாம்

அ) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) கருங்குவளை - இலக்கணக்குறிப்பு தருக.
இ) கோடு - என்பதன் பொருள்.

விடை:
அ) காடெல்லாம்.......
மாடெல்லாம்.......
கோடெல்லாம்.......
நாடெல்லாம்.......
ஆ) பண்புத்தொகை
இ) குளக்கரை

8. அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
துன்னும் மேதி படியத் துதைந்தெழும்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
மன்னு வான்மிசை வானவில் போலுமால்

அ) பாடலில் இடம் பெற்றுள்ள மோனைச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
இ) மேதி என்பதன் பொருள்.

விடை:
அ) அன்னம் ஆடும் அகன்துறைப் பொய்கையில்
கன்னி வாளை கமுகின்மேற் பாய்வன
துன்னும் மேதி படியத் துதைத்தெழும்
ஆ) அன்னம்.......
துன்னும்.......
கன்னி.......
மன்னு........
இ) எருமை

9. அரிதரு செந்நெற் சூட்டின் அடுக்கிய அடுக்கல் சேர்ப்பார்
பரிவுறத் தடிந்த பன்மீன் படர்நெடுங் குன்று செய்வார்
சுரிவளை சொரிந்த முத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு யாப்பார்
விரிமலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு வைப்பார்

அ) பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) செந்நெல் பிரித்து எழுதுக.
இ) சுரிவளை - என்பதன் பொருள் யாது?

விடை:
அ) அரிதரு......... சேர்ப்பார்
பரிவுறத் ....... செய்வார்
சுரிவளை ........ யாப்பார்
விரிமலர்......... வைப்பார்
ஆ) செம்மை + நெல்
இ) சங்கு

10. சாலியின் கற்றை துற்ற தடவரை முகடு சாய்த்துக்
காலிரும் பகடு போக்கும் கரும்பெரும் பாண்டில் ஈட்டம்
ஆலிய முகிலின் கூட்டம் அருவரைச் சிமயச் சாரல்
போல்வலங் கொண்டு சூழும் காட்சியின்மிக்க தன்றே

அ) பாடலில் இடம்பெறும் எதுகைச் சொற்களை எடுத்தெழுது.
ஆ) பகடு என்பதன் பொருள் யாது?
இ) இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் எது?

விடை:
அ) சாலியின்.......
காலிரும்.......
ஆலிய.......
ஆ) எருமைக்கடா
இ) பெரியபுராணம்

11. நாளிகே ரஞ்செ ருந்தி நறுமலர் நரந்தம் எங்கும்
கோளிசா லந்த மாலம் குளிர்மலர்க் குரவம் எங்கும்
தாளிரும் போந்து சந்து தண்மலர் நாகம் எங்கும்
நீளிலை வஞ்சி காஞ்சி நிறைமலர்க் கோங்கம் எங்கும்

அ) பாடலில் இடம்பெற்றுள்ள இயைபுச் சொற்களை எடுத்தெழுதுக.
ஆ) பாடலில் இடம்பெற்றுள்ள எதுகைச் சொற்களை எடுத்தெழுதுக.
இ) இரும்போந்து என்பதன் பொருள் யாது?

விடை:
அ) நாளிகே......... எங்கும்
கோளிசா....... எங்கும்
தாளிரும்........ எங்கும்
நீளிலை.......... எங்கும்
ஆ) நாளிகே.......
கோளிசா......
தாளிரும்......
நீளிலை......
இ) பருத்த பனைமரம்

# மாதிரி வினாத்தாள் – 1

மதிப்பெண்கள் : 100

பகுதி -I (மதிப்பெண்கள் - 15)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.**

**(15x1=15)**

1. **'விரிமலர் கற்றை வேரி' - இதில் வேரி என்னும் சொல்லின் பொருள்**

   அ) நெல் ஆ) சங்கு

   இ) தேன் ஈ) மலர்

2. **தமிழ்நாடு அரசு கிராமப்புற மாணவர்களுக்கு நடத்தும் திறனாய்வுத் தேர்வு எது?**

   அ) தேசியத் திறனறித் தேர்வு

   ஆ) ஊரகத்திறனறித்தேர்வு

   இ) கல்வி உதவித் தொகை படிப்பறிவுத் தேர்வு

   ஈ) மூன்றும் சரி

3. **பொருத்துக.**

   அ) தம்பிக்கு - 1. மு. வரதராசன்

   ஆ) தங்கைக்கு - 2. பாரதிதாசன்

   இ) தமிழ்ப்பழமொழிகள் - 3. அண்ணா

   ஈ) அழகின் சிரிப்பு -4. கி.வா. ஜெகன்நாதன்

   அ) 3 1 2 4 ஆ) 3 1 4 2

   இ) 2 3 1 4 ஈ) 2 1 3 4

4. **பொருந்தாத இணை எது?**

   அ) பனை-முரசு ஆ) புழை-சாளரம்

   இ) கயம்-நீர்நிலை ஈ) நியமம்-அங்காடி

5. **பரமாணுப் புராணம் எனும் அறிவியல் நூலை எழுதியவர்**

   அ) நீலாம்பிகை அம்மையார்

   ஆ) இராஜேஸ்வரி அம்மையார்

   இ) மறைமலையடிகள்

   ஈ) சாவித்திரிபாய் பூலே

6. **திருக்குறள் முதன்முதலில் அச்சிடப்பட்ட ஆண்டு**

   அ) 1814 ஆ) 1836

   இ) 1818 ஈ) 1812

7. **இருபெயரொட்டுப் பண்புத்தொகையில் வல்லினம் மிகும் சான்று தருக.**

   அ) தாமரைப் பாதம் ஆ) மல்லிகைப்பூ

   இ) வாழ்க்கைப் படகு ஈ) கதவைத் திற

8. **தவறானதைத் தேர்ந்தெடுக்க.**

   அ) மூன்று சீர்-சிந்தடி ஆ) இரண்டு சீர்-குறளடி

   இ) ஐந்து சீர்-அளவடி ஈ) ஆறு சீர்-கழிநெடிலடி

9. **புன்புலம் - என்பதன் இலக்கணக் குறிப்பு**

   அ) தொழிற்பெயர் ஆ) வினைத்தொகை

   இ) வேற்றுமைத்தொகை ஈ) பண்புத்தொகை

10. **'இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும் ஆத்மாவும் தமிழர்கள்தான்' - யார் கூற்று?**

    அ) நேதாஜி ஆ) தில்லான்

    இ) சர்ச்சில் ஈ) முத்துராமலிங்கனார்

11. **ஐந்து சால்புகளில் இரண்டு**

    அ) வானமும் நாணமும் ஆ) நாணமும் இலக்கமும்

    இ) இணக்கமும் சுணக்கமும்

    ஈ) இணக்கமும் பிணக்கமும்

**பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.**

(12-15)

அடுப்பிடு சந்தமேடு அகிலின் நாற்றமும்
துடுப்பிடு மைவனச் சோற்றின் நாற்றமும்
மடுப்படு காந்தளின் மணமுந் தோய்தலாற்
கடைப்படு பொருளெலாம் கமழும் குன்றமே.

12. **இப்பாடல் இடம் பெற்ற நூல்**

    அ) பெரியபுராணம் ஆ) சிறுபஞ்சமூலம்

    இ) இராவணகாவியம் ஈ) மணிமேகலை

13. **'சாந்தம்' - இச்சொல்லின் பொருள்**

    அ) நறுமணம் ஆ) சந்தனம்

    இ) தேன் ஈ) இறகு

14. **பொருளெலாம் - பிரித்தெழுதுக.**

    அ) பொருள் + எல்லாம் ஆ) பொருட் + எல்லாம்

    இ) பொருள் + எலாம் ஈ) பொருட் + எலாம்

15. **இப்பாடலை எழுதியவர்**

    அ) சாத்தனார் ஆ) சேக்கிழார்

    இ) காரியாசான் ஈ) புலவர்குழந்தை

பகுதி -II (மதிப்பெண்கள் - 18) பிரிவு - 1

**நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க. (4x2=8)**

**21 ஆவது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

16. திருப்பாவை குறிப்பிடும் காலை வழிபாட்டு நிகழ்வை விளக்குக.
17. யாருக்குப் பூமி பாரமில்லை என்று கவிஞர் குறிப்பிடுகிறார்?
18. புணற்குளம், கண்மாய் - குறிப்பு வரைக.
19. பாலை நிலத்து வெயிலின் வெப்பம் எவ்வாறு இருந்தது?
20. ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றி கூறுவது யாது?
21. 'தரும்' என முடியும் திருக்குறளை எழுதுக.

பிரிவு - 2

**ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக. (5x2=10)**

22. அசை எத்தனை வகைப்படும்? அவை யாவை?
23. பிழைநீக்கி எழுதுக.
    1) குழலியும் பாடத் தெரியும்
    2) நல்ல தமிழுக்கு எழுதுவோம்
24. அகராதியில் காண்க.
    1) கந்தி 2) பாலி 3) மகி 4) நெடில்
25. கலைச்சொல் தருக. 1) Reforming the Letters
    2) Cultural Identity
26. சொல்லுக்குள் சொல் தேடுக.
    1) பாய்மரக்கப்பல் 2) கடையெழுவள்ளல்கள்
27. கருத்தாவாகு பெயர் - விளக்குக.
28. 'இணைகின்றன' - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

பகுதி -III (மதிப்பெண்கள் - 18) பிரிவு - 1

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. (2x3=6)**

29. சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துகளை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.
30. ஏறு தழுவுதல், திணைநிலை வாழ்வுடன் எவ்விதம் பிணைந்திருக்கிறது?
31. அடுத்த தலைமுறைக்கும் தண்ணீர் தேவை - அதற்கு நாம் செய்ய வேண்டியவற்றை எழுதுக.

பிரிவு - 2

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. (2x3=6)**

**34 ஆவது வினாவிற்குக் கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

32. உழவின் சிறப்பு குறித்து நும் பாடப் பகுதியிலுள்ள திருக்குறள் வழி நின்று விளக்குக.
33. தோழியை எழுப்பும் நிகழ்வைத் திருவெம்பாவை எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?
34. 'சொல்அரும்' - எனத்தொடங்கும் சீவகசிந்தாமணி பாடலை எழுதுக.

பிரிவு - 3

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக. (2x3=6)**

35. பட்டப்பெயர்கள் ஆகுபெயர்கள் ஆகுமா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
36. அளவையாகுபெயர்களின் வகைகளை விளக்குக.
37. காணாதான் காட்டுவான் தான்காணான் காணாதான்
    கண்டானாம் தான்கண்ட வாறு. - அலகிட்டு வாய்ப்பாடு தருக.

பகுதி -IV (மதிப்பெண்கள் - 25)

**அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. (5x5=25)**

38. அ) குடும்ப விளக்கு நூலில் தலைவி பேச்சில் வெளிப்படும் பெண்கல்விக்கான கருத்துகளை இன்றைய சூழலுடன் ஒப்பிட்டு எழுதுக. (அல்லது)
    ஆ) பெரியபுராணம் காட்டும் ஆற்று வருணனைகளை விவரிக்க.
39. அ) பள்ளியில் நடைபெற்ற இலக்கியமன்ற விழா நிகழ்ச்சிகளைத் திரட்டித் தொகுப்புரை உருவாக்குக.
    (அல்லது)
    ஆ) 'எனது பயணம்' எனும் தலைப்பில் உங்களது அனுபவங்களை வருணித்து எழுதுக.
40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



விழித்துக் கொண்டிருக்கும் நேரமெல்லாம்
படித்துக் கொண்டிருப்போம்

## எமது வெளியீடுகள் (STATE BOARD)

- 6th to 12th Std - **STEP TO SUCCESS ENGLISH**
- 10th to 12th Std - **ELITE ENGLISH**
- 6th to 12th Std - **உன்னால் முடியும் தமிழ்**
- 10th to 12th Std - **அமுத சுரபி தமிழ்**
- 6th to 10th Std - **சமூகஅறிவியல்** (Tamil & English Medium)
- 8th to 10th Std - **அறிவியல்** (Tamil & English Medium)

# டால்பின் பப்ளிகேசன்ஸ்®

239, கீழப்பட்டித்தெரு, ஸ்ரீவில்லிபுத்தூர் - 626 125, விருதுநகர் மாவட்டம். த.நா.

**Cell : 98653 06197 / 89256 77710 / 99435 67646**
**93453 14146 / 93453 30937**

Mail us : dolphin.pub2005@gmail.com | Visit us : www.kalvidolphin.com

KVB Karur Vysya Bank
DOLPHIN PUBLICATIONS
SCAN & PAY WITH ANY UPI APP
wlpos.2753796a@kvb
TID: 2753796A
BHIM UPI

ICICI Bank iMobile | BHIM | pockets
Merchant Name: DOLPHIN PUBLICATIONS
Mobile Number : 8668163362
Steps to Pay UPI QR Code
Open UPI app > Select Tap to Pay > Scan QR Code > Enter Amount

G Pay **63743 17883**

CITY UNION BANK
DOLPHIN PUBLICATIONS
MID: E01020101079104
SCAN & PAY
UPI ID:CFST20003166@CUB
BHIM UPI